வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 24.08.2023 வியாழக்கிழமை | இதழ் : 257 | பக்கங்கள் : 12

## ராஜபக்ஷக்களின் மீள்வருகை சாத்தியம்

### கூறுகிறார் மிலிந்த மொறகொட



கொழும்பு, ஓக. 24
ராஜபக்ஷக்களின் மீள்வருகையை நிராகரிக்க முடியாது என இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.
இந்திய ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.
2022 இல் பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து மிகப்பெரும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக பதவியிலிருந்து அகற்றப் **11**

## வழிப்பறியில் ஈடுபட்ட போதை கும்பல் கைது

யாழ்ப்பாணம், ஓக.24
வழிப்பறியில் ஈடுபட்டு வந்த போதைக் கும்பல் ஒன்றை மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
மானிப்பாய் பகுதிகளில் தொடர் வழிப்பறிகளில் ஈடுபட்டு வந்த ஐவர் கொண்ட போதைக் கும்பலே இவ்வாறு கைது செய்யப்பட்டது.
கைதானவர்களில் நால்வர் நீதிமன்றின் உத்தரவின் பேரில் கந்தக்காடு மறுவாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மற்றையவர் விளக்கமறியலில் **11**

## இந்திய - இலங்கை உறவுகள் 4 துறைகள் ஊடாக மேம்படும்

### தூதுவர் கோபால் பாக்லே தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 24
உணவுப் பாதுகாப்பு, வலுசக்திப் பாதுகாப்பு, நிதியுதவி மற்றும் நீண்டகால முதலீடுகள் ஆகிய நான்கு துறைகள் ஊடாக இந்திய - இலங்கை உறவுகளை வலுப்படுத்த எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே நேற்று தெரிவித்தார்.
சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற இலங்கை - இந்திய பாராளுமன்ற நட்புறவு **11**

## உள்ளூராட்சித் தேர்தலை உடனே நடத்தவேண்டும்!

### தேர்தல் ஆணைக்குழுவிடம் மொட்டுக் கட்சி கோரிக்கை

கொழும்பு, ஓக. 24
உள்ளூராட்சிமன்றத் தேர்தலை விரைவில் நடத்துமாறு பொதுஜன பெரமுன கட்சி, தேர்தல் ஆணைக்குழுவிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளது.
பொதுஜன பெரமுன கட்சியின் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்கள் 30 பேர் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து இது தொடர்பில் பேச்சு நடத்தினர்.
தேர்தல் நடத்தப்படாமையால், வேட்பாளர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் குறித்து இதன்போது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
இதில் பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாயகம் சாகர காரியவச **11**

## திடீர் மின் துண்டிப்பு

கொழும்பு, ஓக. 24
மின் விநியோக அமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நாட்டின் பல பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.
அம்பாந்தோட்டை, மாத்தறை, எம்பிலிப்பிட்டி, பெலியத்தை பிரதேசங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
இந்தப் பகுதிகளில் மின்சார விநியோகத்தை சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

## வரலாறு படைத்தது இந்தியா

# சந்திரனின் தென்துருவத்தில் தரையிறங்கியது சந்திரயான்-3




சந்திரயான் -3 விண்கலத்தின் விக்ரம் தரையூர்தி நிலவில் தரையிறங்கும் தருணம்...

சிறீஹரிகோட்டா, ஓக. 24
சந்திரனை ஆய்வு செய்ய இந்தியா அனுப்பிய சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் தரையூர்தி (Rover) வெற்றிகரமாக சந்திர தரையில் நேற்று புதன் கிழமை மாலை 6.02 மணிக்கு தரையிறங்கியது.
இதுவரை அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் மட்டுமே சந்திரனில் விண்கலத்தை தரையிறக்கிய நாடுகள். இந்த வரிசையில் இந்தியாவும் இணைந்துள்ளது. அத்துடன், சந்திரனின் தென் துருவத்தில் விண்கலத்தை தரையிறக்கிய முதல் நாடு என்ற சாதனையையும் அது படைத்துள்ளது.
பூமியின் துணை கோளான சந்திரனை ஆய்வு **11**

## இடைக்கால ஏற்பாடாக

# 13ஐ செயல்படுத்த கோரும் உங்கள் நகர்வே சரியானது

### தமிழ் கட்சிகளை பாராட்டினார் அமெ. தூதுவர்



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 24
"நீங்கள் எதிர்பார்க்கும் புதிய அரசமைப்பு இப்போதைக்கு வரும் சாத்தியமில்லாதநிலையில், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரும் உங்களது நகர்வு சரியானது"
- இவ்வாறு நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் தன்னை சந்தித்த தமிழ் கட்சிகளின் தலைவர்களிடம் நேரில் தெரிவித்தார் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்.
கொக்குவிலில் விருந்தினர் விடுதியில் இந்த சந்திப்பு நடந்தது. தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) தலைவர் த. சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன், இலங்கை தமிழரசு கட்சியின் மூத்த துணைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். **11**

## பிரிவினைவாதிகளின் சூழ்ச்சிக்கு பலியாகாதீர்

### கரு ஜயசூரிய நாட்டு மக்களிடம் கோரிக்கை



கொழும்பு, ஓக. 24
தங்கள் மதம், பிறந்த நாடு, கலாசார பாரம்பரியத்தின் மீது உண்மையான அன்புடன் செயல்படும் அனைவரும் பிரிவினைவாதிகளின் தந்திரங்களில் சிக்காமல் கவனமாக இருக்குமாறு நீதியான சமுதாயத்திற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.
இலங்கையின் தேசிய மற்றும் மத நல்லிணக்கத்திற்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய பல சம்பவங்கள் அண்மைக்காலமாக வெளியாகியுள் **11**

## 8,000 ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை

கொழும்பு, ஓக. 24
நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக ஏற்கனவே 8,000 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு, மேலும் 5,500 பட்டதாரி ஆசிரியர்களும், 2,500 இரண்டாம் மொழி ஆசிரியர்களையும் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார் தெரிவித்தார்.
ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்தபோதே கல்வி அமைச்சர் அரவிந்த குமார் இதனைத் தெரிவித்தார்.
இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த கல்வி **11**

# இப்படியும் நடக்கிறது

ஒரு செல்வந்தர் இரண்டு பண்டிதர்களை விருந்துக்கு அழைத்தார். ஒரு பண்டிதர் கை கழுவச் சென்றபோது அவரைப் பற்றி செல்வந்தர் மற்றைய பண்டிதரிடம் புகழ்ந்து பேசினார். ஆனால், கூட இருந்த பண்டிதரோ மற்றவரை ஒரு கழுதை என்றார். பின் கை கழுவப் போனவர் வந்ததும் இவர் கை கழுவச் சென்றார்.

இரண்டாமவரைப் பற்றி முதலாமவரிடம் பெருமையாகப் பேச 'அவர் ஒன்றும் தெரியாத மாடு' என்றார்.

பின்னர் இரண்டு பண்டிதர்களும் உணவு அருந்த அமர்ந்தனர். ஒருவர் தட்டில் புல்லும், மற்றவர் தட்டில் தவிடும் வைக்கப்பட்டபோது இருவரும் கூச்சலிட்டனர்.

தங்களை அவமானப் படுத்தி விட்டதாகக்கூறி கோபப்பட்டனர்.

செல்வந்தர் சொன்னார், "நான் உண்மையில் உங்களை மகா பண்டிதர்கள் என்று கருதித்தான் விருந்துக்கு அழைத்தேன். ஆனால், நீங்கள் யாரென்று உங்கள் மூலமாகவே தெரிந்த பின் அதற்கேற்றாற்போல் உணவு படைத்தேன். என் மீது ஏன் வீணாய்க் கோபப்படுகிறீர்கள்?"

பண்டிதர்கள் முகம் கவிழ்ந்து வெளியே சென்றனர்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியிலிருந்து தோற்கடிக்கப்பட்டு அம்பாந்தோட்டைக்கு புலம்பெயர்ந்தபோது அவருடன்கூட இருந்தவர்களில் இருவர் முக்கியமானவர்கள்.

உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ ஆகிய இருவரும் அவரின் இரு குழல் துப்பாக்கிகள்போல இருந்தார்கள்.

தெற்கில் இனவாதத்தை விதைத்து மீண்டும் ராஜபக்ஷக்கள் மீண்டெழுவதற்கு முக்கிய பங்காற்றியவர்கள் இவர்கள் இருவரும்தான்.

ராஜபக்ஷ அணியிலிருந்து கோட்டாபய ஜனாதிபதி வேட்பாளராக தெரிவாவதற்கும் இவர்கள் இருவரும் முக்கியமானவர்கள். கோட்டாபய தனது தேர்தல் பிரசாரத்துக்கு செல்லும்போது அங்கெல்லாம் விமல் வீரவன்ஸ கலந்துகொள்வதை உறுதி செய்து கொள்ளுமளவுக்கு பிரசார பீரங்கியாக இருந்தவர் விமல் வீரவன்ஸ. சில கூட்டங்களுக்கு விமல் வரும்வரை கோட்டா காத்திருப்பாராம்.

ஆனால், கோட்டா பதவியிலிருந்தபோது அவர்கள் இருவரையும் கட்சியில் இருந்து வெளியேற்றுவதற்கு கட்சிக்குள் சிலர் முயன்றபோது கோட்டா, அந்தச் சிலரின் விருப்பத்தை நிறைவுசெய்வதிலேயே கவனமாக இருந்தார். அதனால்தான் அவர்கள் இருவரும் கோட்டா அமைச்சரவையிலிருந்து முதலில் வெளியேற்றப்பட்டனர்.

கோட்டா அமைச்சரவையிலிருந்து அவர்கள் இருவரும் வெளியேற்றப்பட்ட பின்னர், இருவரும் ஓரணியாக அரசியலில் வலம் வந்தனர்.

ஆனால், இருவரும் அந்த பழைய கூட்டில் இப்போதும் இருக்கிறார்களா என்று தெரியவில்லை. காரணம் அண்மைக்காலமாக இருவரும் ஒன்றாக அரசியலில் வலம் வருவதை காணமுடியவில்லை.

விமல் வீரவன்ஸ, ஏனோ முன்னரைப்போல தீவிர அரசியலில் இருப்பதாகத் தெரியவில்லை. அவர் அவ்வப்போது அறிக்கைகளை வெளியிடுவதுடன் அமைதியாகி விடுகின்றார்.

ஆனால், உதய கம்மன்பில மட்டும் தனி ஆளாக நின்று தெற்கின் இனவாதிகளுக்கு தானே தலைமை என்பது போல காட்சி தருகின்றார்.

குருந்தூர்மலையில் தமிழர்கள் பொங்கலுக்கு ஏற்பாடு செய்தபோது, சிங்கள மக்களுடன் படையெடுக்கப்போவதாக அறிவித்திருந்தவர் பின்னர் அமைதியானார்.

ஏன் இந்த மாற்றம் என்பதை அறியமுயன்றால், அவரின் அந்த அழைப்புக்கு உரிய கவனத்தை சிங்கள மக்கள் வழங்கவில்லை என்றும் அவர் குருந்தூர் மலைக்கு சென்றிருந்தாலும் அவருடன் ஒருசில சிங்கள மக்களே இணைந்திருப்பார்கள் என்பதை அவர் அறிந்துகொண்டதாலேயே கடைசி நேரத்தில் அவர் அந்த முயற்சியை கைவிட்டாரெனத் தெரியவருகின்றது.

இப்போது அவர் புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்.

'வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல் வாதிகள் தெற்கில் சுதந்திரமாக வாழ்வதை போன்று சிங்களவர்கள் வடக்கு மற்றும் கிழக்கில் சுதந்திரமாக வாழவேண்டும்.

சிங்களவர்களின் உரிமைகளை வென்றெடுக்க ஆரம்பமாக கொழும்பில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வீட்டின் முன்பாக இவ்வாரம் போராட்டத்தில் ஈடுபடுவோம். இந்தப் போராட்டத்தில் சிங்கள - பௌத்தர்கள் அனைவரும், இனவாத கொள்கையற்ற தமிழர்களும் கலந்துகொள்ள வேண்டும்' என்று கம்மன்பில வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

அது என்ன கஜேந்திரகுமார் வீட்டுக்கு முன்பாக மட்டும் ஆர்ப்பாட்டம் என்று கேட்க வேண்டும் போல இருந்தது.

அப்போதுதான் இந்த பண்டிதர்களின் கதை ஞாபகத்துக்கு வந்தது.!

**- ஊர்க்குருவி.**

# தங்கரதத்தில் வலம் வந்தாள் தெல்லிப்பழை துர்க்காதேவி



வடமராட்சி, ஒக. 23

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தில் தங்கரத உற்சவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற கொடித்தம்ப பூசையைத் தொடர்ந்து, 5.00 மணியளவில் வசந்தமண்டப பூசை இடம்பெற்றது.

துர்க்கையம்பாள் சண்டேஸ்வரியுடன் உள்வீதி ஊடாக வலம் வந்து, தங்கரதத்திலேறி வெளிவீதியில் வலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தாள்.

(அ-02)

# யாழில் முதலுதவி பயிற்சிப் பாசறை

யாழ்ப்பாணம், ஒக. 24

யாழ்ப்பானத்தில் 'சிறகுகள் ' அமையத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளையோர்களுக்கான முதலுதவிப் பயிற்சிப் பாசறையொன்று எதிர்வரும் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இலங்கை சென். ஜோன் அம்பியுலன்ஸ் சேவையினரை வளவாளர்களாகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ள இப்பயிற்சிபாசறை யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள சென். ஜோன்ஸ் அம்பியுலன்ஸ் சேவை பணிமனையில் காலை 8.30 மணி முதல் 2.00 மணி வரை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நாட்டுக்கு இன்சுலின் இறக்குமதி!

கொழும்பு, ஒக. 24

நாட்டில் தட்டுப்பாட்டு நிலவிய 275,000 இன்சுலின் மருந்து பொதிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட இன்சுலின் மருந்து பொதிகளை மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர், வைத்தியர் சமன் ரத்நாயக்க குறிப்பிட்டார். (அ)

# ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்ரிக் பொருட்கள் ஒக்.1 முதல் தடை

கொழும்பு, ஒக. 24

ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் நாட்டில் ஒருமுறை பயன்படுத்தக்கூடிய 9 பிளாஸ்ரிக் பொருட்களின் உற்பத்தி அல்லது விற்பனைக்கு தடை விதிக்கப்படுவதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்டினால் வெளியிடப்பட்டுள்ளதாக அதிகாரச பை தெரிவிக்கின்றது.

ஒருமுறை பயன்படுத்தக்கூடிய குடிதண்ணீர் குவளைகள், பிளாஸ்ரிக் தட்டுகள், கோப்பைகள், கரண்டிகள், முட்கரண்டி மற்றும் கத்திகள் உட்பட 9 பிளாஸ்ரிக் பொருட்களுக்கே ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவற்றின் உற்பத்தி, உள்ளூர் பயன்பாட்டுக்காக இறக்குமதி செய்தல், விற்பனை, இலவச சலுகை அல்லது காட்சிப்படுத்தல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த உத்தரவை மீறுபவர்களுக்கு எதிராக தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின் விதிகளின்படி சட்டம் அமுல்படுத்தப்படும் என்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# கண்ணிவெடி ஆலோசனைக் குழுவுடன் வவுனியா பல்கலைக்கழகம் ஒப்பந்தம்

வவுனியா, ஒக. 24

வவுனியா பல்கலைக்கழகத்துக்கும் கண்ணிவெடிகள் ஆலோசனைக் குழுவுக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்று நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன், வியாபார கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் யோ.நந்தகோபன், மக் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் கிறிஸ்டி மெக்லெனன், திறன் அபிவிருத்தி நிபுணர் செந்தூரன் மற்றும் தொழில் மற்றும் சமூகத் தொடர்புப் பிரிவு இணைப்பாளர், சி.சிவனேந்திரன், பல்கலைக்கழக அதிகாரிகள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



குறித்த ஒப்பந்தத்தமானது சரியான தொழில்வாய்ப்பு மற்றும் புதிய தொழில்களுக்கு தயார்படுத்தல் மற்றும் புதிய முயற்சியாளர்களை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu
24.08.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஏன் ரணில் அமைதியாக இருக்கின்றார்?

மட்டக்களப்பில் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் ஆராய்வதற்காக சென்ற தமிழ் செயல்பாட்டாளர்களை பிக்குவின் தலைமையிலான அணியொன்று, மூன்று மணித்தியாலங்கள் தடுத்து வைத்து அச்சுறுத்தியிருக்கின்றனர். இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களில் கத்தோலிக்க மதகுருமார்களும் ஊடகவியலாளர்களும் அடங்குவர். ஆனால், எவரும் இது வரையில் கைது செய்யப்படவில்லை. தமிழ் மக்களின் தலைகளை வெட்டி களனிக்கு கொண்டு செல்வேன் - என்று ஒரு சிங்கள அரசியல்வாதி கூறுகின்றார். கூறுபவர் அல்ல இங்கு பிரச்னை - ஆனால், அவ்வாறு கூறிவிட்டும் எவ்வித சட்ட நடவடிக்கைகளுமின்றி அமைதியாக இருக்கலாமென்று அவர் கருதுவதும் அரசாங்கம் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயங்குவதும்தான் இங்கு பிரச்னைக்குரியது.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராக எதனையும் கூறலாம், எதனையும் செய்யலாமென்னும் சிங்கள ஆக்கிரமிப்பு மனோபாவமும் அச்சுறுத்தலும்தான் பிரச்னைக்குரியது. இந்த நிலையில், தென்னாபிரிக்க வகை மாதிரியின் அடிப்படையில், உண்மைகளை கண்டறியும் ஆணைக் குழுவை நியமிக்கப் போவதாக அரசாங்கம் கூறிவருகின்றது. இந்த நகைச்சுவைக்காக தமிழர்களால் சிரிக்கத்தான் முடியவில்லை.

இந்த இடத்தில்தான் ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் சந்தேகிக்க வேண்டியிருக்கின்றது. ரணில் ஒரு தாராளவாதி - அவர் தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் சாதகமான பார்வையை கொண்டிருக்கின்றார் என்றெல்லாம் ஒரு பார்வையுண்டு. ஆனால், அவரின் நடவடிக்கைகளில் அதனை, இதுவரையில் காண முடியவில்லை. ஒரு தாராளவாதியால் எவ்வாறு இவ்வாறான அசிங்கங்களை அனுமதித்துக் கொண்டிருக்க முடியும்? தமிழர்களின் தலையை வெட்டுவேன் - என்று கூறும் ஓர் அரசியல்வாதி வெளியில் சுதந்திரமாக நடமாடும் நாட்டில், எவ்வாறு ரணில் விக்கிரமசிங்க நல்லிணக்கத்தை கட்டியெழுப்பப் போகின்றார்?

ரணில் விக்கிரமசிங்கவும் முன்னைய அரசியல் ஆட்டத்தைத்தான் ஆட முயற்சிக்கின்றாரா? தமிழர்களின் வாக்குகளுக்காக 13ஐ ஆதரிப்பதாக கூறுவது, சிங்களவர்களின் வாக்குகளுக்காக - அவர்களின் அனைத்து அத்துமீறல்களையும் அனுமதிப்பது. இதுதான் ரணிலின் அணுகுமுறையென்றால், ரணிலுக்கும் ஏனைய சிங்கள அரசியல்வாதிகளுக்கும் என்ன வித்தியாசம் உண்டு?

பௌத்த - சிங்கள அடிப்படைவாதிகளை கட்டுப்படுத்தாவிட்டால், இந்த நாட்டில் ஒருபோதும் புதிய அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்தவே முடியாது. ஏனெனில், சிங்கள - பௌத்த பிக்குகளும் அவர்களால் வழிநடத்தப்படும் அமைப்புகளும் தலிபான்களின் இலக்கையே கொண்டிருக்கின்றன. இவர்கள் அடிப்படையில் சிங்கள தலிபான்களாவர். நல்லிணக்கத்தை ஏற்படுத்த விரும்பினால் இவர்களை கட்டுப்படுத்த வேண்டும். அவர்கள் பலம் கீழிறக்கப்பட வேண்டும். அவர்கள் பலவீனப்படுத்தப்பட வேண்டும். இதனை ரணில் விக்கிரமசிங்கவால் செய்ய முடிந்தால் மட்டுமே ரணிலை தமிழ் மக்கள் நம்ப முடியும்.

தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு அப்பால், இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமென்றால் சிங்கள தலிபான்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். ரணில் விக்கிரமசிங்க 2049ஆம் ஆண்டில் ஒரு புதிய இலங்கையை கனவு காண்பதாகக் கூறிவருகின்றார். 2049இல் அல்ல - கற்காலத்தில் சிந்தித்துக் கொண்டிருக்கும் பௌத்த பிக்குகளை கட்டுப்படுத்த முடியாவிட்டால், 3000 ஆண்டளவில் கூட, இலங்கையை கட்டியெழுப்ப முடியாது ரணில் விக்கிரமசிங்க அவர்களே!

எனவே, ரணில் விக்கிரமசிங்க தன்னையொரு தாராளவாதியாக முதலில் நிரூபிக்க வேண்டும். அது பேச்சளவில் இருக்கக்கூடாது. இதனை தமிழ் மக்களின் பிரச்னையாக மட்டும் பார்க்க வேண்டியதில்லை. ஒட்டுமொத்த இலங்கை மக்களின் பிரச்னையாக நோக்க வேண்டும். ஏனெனில், சிங்கள தலிபான்கள் ஒட்டுமொத்த இலங்கைக்கும் ஆபத்தானவர்கள்.

# அரியாலையில் புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், ஒக. 24

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டையொட்டி 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் பதின்மூன்றாவது நிகழ்வு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் (ஸ்ரான்லி கல்லூரி) நாளை வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இப் புத்தக அரங்க விழாவின் முதல்நாள் நிகழ்வான ஈழத்து நூல்களை அறிவோம் - நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் எழுத்தாளரும், ஊடகருமான யோகா பாலச்சந்திரனின் நினைவு அரங்கில் எழுத்தாளரும், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தருமான ரஜிதா அரிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் நூல் அறிமுக உரைகளை க.இ.கமலநாதனின் 'பெத்தம்மா' நாடக நூல் தொடர்பாக நூலகரும், இசை ஆரம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான ஹாயத்திரி சண்முகநாதனும், யானைத் தாத்தா தேவன் பூதனாரின் 'வானம் எங்கள் வசம்' பாடல் புத்தகம் பற்றி பிரபல எழுத்தாளரும், கல்வி நிர்வாக சேவையாளருமான இயல்வாணனும், பஞ்சகல்யாணியின் 'கதை மரம்' நூல் தொடர்பாக பிரபல எழுத்தாளரும், ஓய்வுநிலை கிராம சேவகருமான வடகோவை வரதராஜனும், யோ. யோண்சன் ராஜ்குமாரின் 'அமைதிப்பூங்கா' நூல் தொடர்பாக ஆசிரியரும், வேடதாரி சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான எஸ்.ரி.அருள்குமரனும், அருட்திரு இராசேந்திரம் ஸ்ரலின் அவர்கள் மொழிபெயர்த்த 'சாதனை படைக்கும் யோனத்தன் லிவிங்ஸ்ரன்' நூல் பற்றி யாழ். பல்கலைக்கழக மாணவி கார்த்திகா பிரேமராஜாவும் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து மாலை 5 மணியளவில் செம்முகம் ஆற்றுகைக் குழுவின் தயாரிப்பில், க.சத்தியசீலனின் நெறியாள்கையில் "எலியார் எங்கே போனார் ?" சிறுவர் நாடகமும், "கோமாளிகள்" ஆற்றுகையும் இளையோர் பேரவையின் தயாரிப்பில், கனிஷ்ரனின் நெறியாள்கையில் "சிறுவர் அரங்காற்றுகையும்" நடைபெறவுள்ளன. (அ)

# ஒழுக்கம் தவறிய குற்றச்சாட்டில் பொலிஸார் ஐவர் இடைநிறுத்தம்!

கொழும்பு, ஒக. 24

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் பொலிஸாருக்குரிய ஒழுக்கம் தவறிச் செய்த குற்றங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட 5 பொலிஸார் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனரென நேற்று புதன்கிழமை பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, வாகரை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த இரு பொலிஸாருக்கிடையே கடந்த 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை ஏற்பட்ட கைகலப்பில் கல்லால் தாக்கிய சம்பவத்தில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் காயமடைந்ததையடுத்து, தாக்கிய பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு, பிணையில் வெளிவந்த அவர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

அதனை தொடர்ந்து, கடந்த 11ஆம் திகதி ஏறாவூரைச் சோந்த இளைஞர் ஒருவர் மட்டக்களப்பு நகரில் வேலை பார்த்து வரும் கடையில் வேலை முடித்துக்கொண்டு வீடு திரும்புவதற்காக இரவு 11 மணியளவில் வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தார்.


அவ்வேளை முச்சக்கர வண்டியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 3 பொலிஸார் இளைஞரை நிறுத்தி, அச்சுறுத்தி, அவரிடம் இருந்து 6500 ரூபாயை பறித்தெடுத்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த 3 பொலிஸார் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை தொடர்ந்து, கடந்த 21ஆம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர். அதனையடுத்து, அந்த 3 பொலிஸ் அதிகாரிகளும் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டனர்.

மேலும், கடந்த 20ஆம் திகதி கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த அதே பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மாடு ஒன்றை திருடிய குற்றத்தில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற பிணையில் வெளிவந்த நிலையில், அவரும் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டார்.

இவ்வாறு குற்றச் செயல்கள் காரணமாக கிழக்கு மாகாணத்தில் கடந்த 15 நாட்களில் 5 பொலிஸார் கைது செய்யப்பட்டு, பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனரென அவர் தெரிவித்தார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். ஊழியர்களால் ஆதாயமும் உண்டு.

**இடபம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மிதுனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். ஊழியர்கள் உதவுவார்கள்.

**கடகம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். புது வேலை அமையும். வியாபாரம் தழைக்கும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**சிம்மம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். தோற்றப் பொலிவுக் கூடும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். மரியாதை கூடும். புதிய மாற்றங்கள் ஏற்படும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. சிறுசிறு அவமானம் ஏற்படும். உத்தியோகத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். எண்ணங்கள் நிறைவேறும் நாள்.

**மகரம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள்.வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**கும்பம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும்.வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

# இஸ்ரோவுக்கு மு. க. ஸ்டாலின் வாழ்த்து






சென்னை, ஓக. 24

நிலவின் தென் துருவத்தில் சந்திரயான்- 3 விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக தரையிறங்கியது. இதன் மூலம், நிலவில் தடம் பதித்த நாடுகளின் வரிசையில் இந்தியா 4வது இடத்தில் உள்ளது. வரலாற்று சாதனை படைத்த இஸ்ரோவை பலர் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், இஸ்ரோவுக்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது ருவிட்டர் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து டுவிட்டரில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளதாவது:- சந்திரயான்- 3 வெற்றிகரமாக தரையிறங்கியதற்கு இஸ்ரோவுக்கு வாழ்த்துகள். நிலவின் மேற்பரப்பை கைப்பற்றிய 4ஆவது நாடாக இந்தியாவை நிறுத்தும் ஒரு மகத்தான சாதனை. அயராத முயற்சிகள் மற்றும் புதுமைக்காக ஒட்டுமொத்த குழுவிற்கும் பாராட்டுக்கள். இந்தியாவின் விண்வெளி ஆய்வுக்கு ஒரு மாபெரும் பாய்ச்சல்- என அவர் கூறினார்.

(அ)

# சென்னை புறநகரில் பரவலாக மழை

சென்னை, ஓக. 24

தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கடந்த 2 நாட்களாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இரவு மற்றும் காலை நேரங்களில் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. நேற்று இரவும் சென்னையில் பல்வேறு இடங்களில் மழை கொட்டியது. எழும்பூர், புரசைவாக்கம், பெரம்பூர், செங்குன்றம், புழல், அயனாவரம், கோயம்பேடு, கோடம்பாக்கம், போரூர், ராயபுரம், தண்டையார் பேட்டை, திருவொற்றியூர், மீனம்பாக்கம், வேளச்சேரி, தாம்பரம், ஆலந்தூர், திருவான்மியூர் உள்ளிட்ட இடங்களில் இரவு தொடங்கிய மழை அதிகாலை வரை நீடித்தது. பலத்த மழை இல்லாமல் சாரல் மழையாக பெய்தது. சில இடங்களில் சுமார் அரைமணிநேரம் மழை வெளுத்து வாங்கியது. இதே போல் காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களிலும் பரவலாக மழை கொட்டியது. அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டம் ஆர்.கே.பேட்டையில் 9 செ.மீட்டர் மழை பதிவாகி உள்ளது. காஞ்சிபுரம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளான ஒரிக்கை, செவிலிமேடு, ஒலி முகமது பேட்டை, பாலு செட்டி சத்திரம், தாமல், வாலாஜாபாத், பரந்தூர், மாகரல், ஆர்ப்பாக்கம் உள்ளிட்ட இடங்களில் நேற்று காலையும் மழை பெய்தது. இதனால் பள்ளி-கல்லூரிக்கு செல்லும் மாணவ-மாணவிகளும், வேலைக்கு செல்வோரும் அவதி அடைந்தனர். திருவள்ளூர் ஆர்.கே. பேட்டை, திருத்தணி, ஊத்துக்கோட்டை, திருவாலங்காடு உள்ளிட்ட இடங்களில் மழை வெளுத்துவாங்கியது. இதனால் தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கியது.

(அ)

# சிறுபான்மை உரிமைகளை காக்க தி.மு.க. தொடர்ந்து செயலாற்றும்

## முதலமைச்சர் ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஓக. 24

சென்னை கோயம்பேட்டில் மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற கருணாநிதியின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ-மாணவிகளுக்கான பேச்சு போட்டி பரிசளிப்பு விழாவில் மாநில அளவில் வெற்றி பெற்ற 6 மாணவ-மாணவிகளுக்கு பரிசுத் தொகைக்கான காசோலைகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கி பாராட்டினார்.

அப்போது அவர் பேசியதாவது:- எப்போதும் என்னை சுறுசுறுப்பாக வைத்திருக்கக் கூடிய, ஊக்கம் தரக்கூடிய வகையில் என்னை இயக்கிக் கொண்டிருக்கக் கூடியவர்கள் யார் என்று கேட்டால், மாணவர்களும், இளைஞர்களும்தான். எனவே, அப்படிப்பட்ட மாணவ மாணவியர்கள் நிரம்பியிருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சியில், உங்களிடையே இருப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். திராவிட இயக்கம் என்பதே பேசிப்பேசி வளர்ந்த இயக்கம். திராவிட இயக்கம் என்பதே எழுதி எழுதி வளர்ந்திருக்கக்கூடிய இயக்கம் என்பது எல்லோருக்கும் தெரியும். நமது தி.மு.க. அரசு எப்போது ஆட்சிப் பொறுப்பேற்கிறதோ, அப்போதெல்லாம் சிறுபான்மையினர் நலனுக்காக போராடக்கூடிய, வாதாடக்கூடிய, சாதனைகளை தீட்டக்கூடிய பல்வேறு பணிகளை நிறைவேற்றி தந்திருக்கிறது என்பதெல்லாம் ஒரு மிகப்பெரிய வரலாறு. இப்படி சிறுபான்மையினர் நலன் காக்கும் ஏராளமான திட்டங்களை நம்முடைய அரசின் மூலமாக நாம் தொடர்ந்து செய்து வருகிறோம். சிறுபான்மையினர் உரிமைகளைக் காக்க மக்கள் மன்றத்திலும் தி.மு.க. தொடர்ந்து செயலாற்றிடும் என்ற உறுதியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்-என்றார்.

(அ)

# புழல் சிறையில் அதிரடி சோதனை

சென்னை, ஓக. 24

புழல் ஜெயலில் வெளிநாடுகளை சேர்ந்த விசாரணை கைதிகள் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்கள் கைத்தொலைபேசி பயன்படுத்துவதாக தகவல் கிடைத்தது. இதையடுதது 20 பேர் கொண்ட அதிகாரிகள் அதிரடியாக சென்று புழல் ஜெயிலுக்குள் சோதனை நடத்தினார்கள். அப்போது இலங்கையை சேர்ந்த அலெக்சாண்டர், கொலம்பியாவை சேர்ந்த எட்வின், நைஜீரியாவை சேர்ந்த டேவிட், அகஸ்டின், எர்ணாவூரை சேர்ந்த ராம்குமார் ஆகியோரை சோதனையிட்டதில் அவர்கள் கைத்தொலைபேசி பயன்படுத்தியது தெரிய வந்தது. இதையடுத்து அவர்களை பொலிஸார் பிடித்து விசாரித்தனர். அவர்களிடம் இருந்து கைத்தொலைபேசிகளையும் பறிமுதல் செய்தனர்.

(அ)

# 45,000 ஆசிரியர்களுக்கு நாட்டில் பற்றாக்குறை!

## விரிவுரையாளர்கள் சங்கம் தகவல்

**கொழும்பு, ஓக. 24**

**பாடசாலைக் கட்டமைப்பில் 45 ஆயிரம் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக இலங்கை கல்வியியலாளர் சேவை விரிவுரையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

2018ஆம், 2019ஆம் ஆண்டுகளில், உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி, கல்வியற் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் கலாசாலைகளுக்குள் நுழைய எதிர்பார்த்த மாணவர்கள் சுமார் 5 வருடங்களாக கல்வியியற் கல்லூரி மற்றும் ஆசிரியர் கலாசாலைகளுக்கு மாணவர்கள் உள்ளீர்க்கப்படவில்லை என அந்தச் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

கடந்த கோவிட் பருவத்தில், பல ஆசிரியர் கல்லூரிகள் சிகிச்சை மையங்களாகப் பயன்படுத்தப்பட்டன.

அதன் பயன்பாட்டுக்கு பின்னர் அங்கிருந்த மெத்தைகள் மற்றும் தலையணைகள் அழிக்கப்பட்டதால் அவர்களின் பல வளங்கள் இழக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை கல்வியியலாளர் சேவை விரிவுரையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், மாணவ ஆசிரியர்களின் இறுதிப் பரீட்சை விடைத்தாள் திருத்தப் பணிகள் நிறைவுறுத்தப்பட்டு, அவர்களுக்கான பெறுபேறுகள் வழங்கப்பட்டு ஆசிரியர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், தங்களுக்கான விடைத்தாள் திருத்தப்பணிகளுக்கான கட்டணம் இது வரையில் செலுத்தப்படவில்லை என இலங்கை கல்வியியலாளர் சேவை விரிவுரையாளர்கள் சங்கத்தின் உப செயலாளர் எஸ்.எம்.பீ பண்டார தெரிவித்தார்.

# நுவரெலியா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஓக. 24

மயக்க மருந்து தட்டுப்பாடு காரணமாக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்று முதல் அமுலாகும் வகையில் சாதாரண சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக சுகாதார தொழிற்சங்க சம்மேளனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அத்துடன், அவசர சத்திர சிகிச்சைகள் மாத்திரம் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே சுகாதார தொழிற்சங்க சம்மேளனங்கள் இந்த விடயத்தை தெரிவித்துள்ளன.

நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் ஐசோப்ளோரின் மற்றும் சியோப்ளோரின் போன்ற மயக்கமருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக குறித்த சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.பீ.மெதிவத்த தெரிவித்தார்.

இதன் காரணமாக சாதாரண சத்திர சிகிச்சைகள், நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, 7 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து நாளை காலை 8 மணிமுதல் நாட்டின் அனைத்து வைத்தியசாலைகளிலும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக நிறைவுக்காண் தாதி மருத்துவ சேவை தெரிவித்துள்ளது.

(அ)

# மாத்தறை ஏஸ் பவர் நிறுவனத்திடம் 23 மெகாவாட் மின்சாரம் கொள்வனவு

கொழும்பு, ஓக. 24

மின்சார நெருக்கடியை தீர்க்கும் வகையில் மாத்தறை ஏஸ் பவர் தனியார் மின்னுற்பத்தி நிலையத்திடமிருந்து மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்மூலம் 23 மெகாவாட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

தென் மாகாணத்திற்கு தொடர்ச்சியாக மின்சாரத்தை விநியோகிக்கும் நோக்கில் மாத்தறை ஏஸ் பவர் தனியார் நிறுவனத்திடமிருந்து அவசர கொடுக்கல் வாங்கலின் அடிப்படையில் மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக எம்பிலிபிட்டிய ஏஸ் பவர் தனியார் நிறுவனத்திடமிருந்தும் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை கூறியுள்ளது.

இதேவேளை, சமனல வாவியிலிருந்து நேற்று மாத்திரமே மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என மின்சார சபை தெரிவித்துள்ளது.

(அ)

# ஒரு இலட்சத்து 32,000 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் சிக்கலில்

## வறட்சியான காலநிலை காரணமாக

கொழும்பு, ஓக. 24

வடக்கு, கிழக்கு, வட மத்திய மாகாணங்களுக்கும் மொனராகலை மாவட்டத்திற்கும் வெப்பம் தொடர்பான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியளவு வெப்பம் நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஆகவே அந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் வெப்பம் தொடர்பில் அவதானமாக செயற்படுவதுடன், அதிகளவு நீரைப் பருகுமாறும் நிழலான இடங்களில் ஓய்வெடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வறட்சி காரணமாக 132,000 இற்கும் அதிகமான குடும்பங்களுக்கு குடிதண்ணீரை விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதனிடையே, வறட்சியால் விலங்குகளின் உடல்நிலை பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

(அ)

# கண்டியில் நான்கு யானைகள் குழம்பியதால் பெண் காயம்!

## அச்சமடைந்த மூவர் ஏரிக்குள் பாய்ந்தனர்

கொழும்பு, ஓக. 24

கண்டியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க கும்பல் பெரஹெராவின்போது விஷ்ணு தேவாலயத்தைச் சேர்ந்த இரண்டு யானைகள் குழப்பமடைந்ததில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குறித்த இரண்டு யானைகளும் குழப்பத்தில் ஈடுபட்டதையடுத்து, தலதா மாளிகைக்குச் சொந்தமான மேலும் இரண்டு யானைகளும் குழம்பின.

இந்நிலையில், தலதா மாளிகைக்குச் சொந்தமான இரண்டு யானைகளும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு வீதிகளில் ஊர்வலமாகச் சென்றன. மற்றைய இரண்டு யானைகளும் குயின்ஸ் ஹோட்டல் அருகே கட்டப்பட்டிருந்தன.

சம்பவத்தின்போது, பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், மூவர் அச்சமடைந்து கண்டி ஏரியில் (நுவர வெவ) வீழ்ந்துள்ளனர். பின்னர், மூவரையும் பொலிஸ் உயிர்காக்கும் பிரிவு அதிகாரிகள் மீட்டனர்.

(அ)

# போலி ஆவணங்கள் தயாரித்த கிராம அலுவலர் கைதாகினார்!

கொழும்பு, ஓக. 24

பிள்ளைகளை பாடசாலையில் சேர்ப்பதற்காக போலி ஆவணங்களைத் தயாரித்தார் என்ற குற்றச்சாட்டில் கிராம அலுவலர் ஒருவரை கண்டி விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கல்வி அமைச்சின் மேலதிக செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், கண்டி பிரதேசத்துக்கு உட்பட்ட பிரிவு ஒன்றுக்குப் பொறுப்பான கிராம அலுவலரே கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

போலி ஆவணங்களை தயாரித்து, தவறான தகவல்களை பதிவு செய்து கிராம சேவகர் சான்றிதழ் வழங்க உதவிய குற்றச்சாட்டிலேயே கிராம அலுவலர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# இறந்தவருக்கு நீதி கோரி சடலத்துடன் போராட்டம்!

## வவுனியா மக்கள் நடத்தினர்

வவுனியா, ஓக. 24

போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த கோரியும், இறந்தவருக்கு நீதி கோரியும் வவுனியாவில் சடலத்துடன் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.



கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் உள்ள மதுபானச்சாலைக்கு சென்றிருந்த இளம் குடும்பஸ்தரை அங்கு மது அருந்திக் கொண்டிருந்த இருவர் அழைத்துக் கதைத்துள்ளனர்.

இதன்போது, குறித்த இளம் குடும்பஸ்தரை தாக்கி நிலத்தில் தூக்கிப் போட்டுள்ளனர். இதனால் இளம் குடும்பஸ்தர் படுகாயமடைந்துள்ளார். அங்கு நின்றவர்கள் அவரது வீட்டுக்கு தகவல் வழங்கியதையடுத்து, படுகாயமடைந்த குடும்பஸ்தரின் தாயார் வருகை தந்து வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அவசர சிகிச்சை பிரிவில் அனுமதித்த போதும் அவர் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்தார்.

இச் சம்பவத்தில், வவுனியா, மகாறம்பைக்குளம் காந்தி வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பிரதீபன் (தீபன்) என்பவரே உயிரிழந்தவராவார். இவரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பூந்தோட்டம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இதன்போது, சடலத்தை எடுத்து வந்த அக் கிராம மக்களும், கிராம பொது அமைப்புக்களும் சடலத்துடன் போதைப் பொருள் பாவனைக்கு எதிராகவும், இறந்தவருக்கு நீதி கோரியும் பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(அ)

# நாடு திரும்பினார் ரணில்

கொழும்பு, ஓக. 24

சிங்கப்பூர் விஜயத்தை நிறைவு செய்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தூதுக்குழு நேற்று முன் தினம் இரவு நாடு திரும்பியது.

சிங்கப்பூர் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில், நேற்று முன் தினம் இரவு 11.27 அளவில் இந்தக் குழு நாட்டை வந்தடைந்ததாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் கடமை நேர முகாமையாளர் தெரிவித்தார்.

இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கடந்த 21ஆம் திகதி சிங்கப்பூர் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்த நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பொலிஸ், காணி அதிகாரங்களை வலிந்து சென்று வழங்காது அரசு!

## கூறுகின்றார் நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, ஓக. 24

**“அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் இதுவரையில் மாகாணங்களுக்கு பகிரப்படாத அதிகாரங்களை வலிந்துசென்று பகிர்வதற்கு அரசு தயாரில்லை. பாராளுமன்றத்தின் அனுமதி கிடைத்தால் மட்டுமே இதற்கான நடவடிக்கையை ஜனாதிபதி மேற்கொள்வார்.” - என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டமென்பது எமது நாட்டு அரசமைப்புக்கு பலவந்தமாக திணிக்கப்பட்டதொன்றாகும். அப்போதைய சூழ்நிலையில் அதனை ஏற்கவேண்டிய நிலை ஜே.ஆர்.ஜெயவர்தனவுக்கு ஏற்பட்டது. இது சிறந்த தீர்வு என இந்தியாவும் நம்பியது.

13 ஆவது திருத்தச்சட்டம் என்பது எமது அரசமைப்பின் ஓர் அங்கம். எனினும், அதிலுள்ள சில அதிகாரங்கள் (பொலிஸ், காணி) மத்திய அரசிடமிருந்து மாகாணங்களுக்கு பகிரப்படவில்லை. அந்த அதிகாரங்கள் வேண்டும் என வடக்கு, கிழக்கு



தமிழ் அரசியல்வாதிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

இது சம்பந்தமாக சர்வகட்சி கூட்டத்தை நடத்தி ஆலோசனை பெறலாம், இறுதியில் பாராளுமன்றம் முடிவெடுக்கும் என ஜனாதிபதி பதிலளித்தார். மாறாக 13 தொடர்பான பேச்சை வலிந்துசென்று அரசு ஆரம்பிக்கவில்லை. 13 இல் இது வரை வழங்காத அதிகாரங்களை வழங்க அரசு தயாராகவும் இல்லை. பாராளுமன்றம் அனுமதி வழங்காத எதையும் இது விடயம் தொடர்பில் ஜனாதிபதி செய்யமாட்டார்.

வடக்கு, கிழக்கு மக்களின் நிலைப்பாடும், அங்குள்ள அரசியல்வாதிகளின் நிலைப்பாடும் வேறுபட்டவை. வடக்கு, கிழக்கில் இருந்து படைகளை அகற்ற வேண்டும் என கூட்டமைப்பினர் கூறுகின்றனர். ஆனால் படை முகாமைகள் அகற்றப்படக்கூடாது என மக்கள் போராட்டம் நடத்துகின்றனர். அதேபோல டக்ளஸ், பிள்ளையான் தரப்பிடமும் மாறுபட்ட கருத்துகள் உள்ளன-என்றார்.

# 11 இராணுவ வாகனங்களை இலங்கைக்கு வழங்கிய சீனா



கொழும்பு, ஓக. 24

சீனாவின் தேசிய பாதுகாப்பு அமைச்சு 6.2 மில்லியன் டொலர் மதிப்பிலான 11 இராணுவ வாகனங்களை இலங்கை இராணுவத்தின் உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் விசேட கடமைகளுக்கு ஈடுபடுத்துவதற்காக கையளித்துள்ளது.

பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன், சீன தேசிய பாதுகாப்பு அமைச்சின் அவசர கட்டளை மற்றும் தொடர்பாடல் அமைப்பு இந்த வாகனங்களை இராணுவத் தலைமையகத்தில் வைத்து நேற்று பெற்றுக்கொண்டுள்ளார்.

அதி நவீன தகவல் தொடர்பு சாதனங்களுடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த வாகனங்கள் இராணுவ நோக்கங்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் மேலதிக செயலாளர்கள், பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் உதவிப் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(அ)

# முதியோர், நோயாளருக்கான ஜூலை மாத கொடுப்பனவு நாளை முதல் வழங்கப்படும்

கொழும்பு, ஓக. 24

முதியோர், ஊனமுற்ற மற்றும் நீரிழிவு நோயாளர்களுக்கான ஜூலை மாதத்திற்கான கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக 2,684 மில்லியன் ரூபா நிதி, திறைசேரியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிதி மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

முதியோருக்கான கொடுப்பனவுகளை தபால் அலுவலகங்களின் ஊடாகவும் ஊனமுற்ற மற்றும் நீரிழிவு நோயாளர்களுக்கான கொடுப்பனவுகளை பிரதேச செயலகங்களின் ஊடாகவும் நாளை முதல் பெற்றுக்கொள்ள முடியும் என இராஜாங்க அமைச்சர் தமது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# நளின் பண்டார, வசந்த யாப்பா சபையில் இருந்து வெளியேற்றம்

## 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட அமர்வு

கொழும்பு, ஓக. 24

பாராளுமன்ற அமர்வுகள் நேற்று 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

இதன்போது குழப்பத்தை விளைவித்தமைக்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் நளின் பண்டார மற்றும் வசந்த யாப்பா பண்டார ஆகியோரை சபையிலிருந்து வெளியேறுமாறு சபாநாயகர் அறிவித்திருந்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல பதில் நேரத்தில் ஏற்பட்ட கடும் அமளி காரணமாக பிரதிச் சபாநாயகர் பாராளுமன்றத்தை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடு சட்டத்தின் கீழான ஒழுங்குமுறைகள், ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான உத்தரவு, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் வர்த்தமானி அறிவித்தல் குறித்து நேற்று பாராளுமன்ற விவாதத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் நேற்று காலை பாராளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பமாகின. இதன்போது கேள்வி பதிலுக்காக நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார எழுப்பிய கேள்விக்கு ஆளும்தரப்பில் இருந்து உரிய பதில் வழங்கப்படவில்லை.

இருப்பினும் அவர் தொடர்ந்தும் தனது கேள்வியை எழுப்பிய நிலையில் சம்பந்தப்பட்ட அமைச்சர் பதில் வழங்குவதற்கு சபையில் இல்லை என்பதனால் நேரத்தை வீண்விரயம் செய்ய வேண்டாம் என ஆளும் கட்சியின் பிரதம கொறடா, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்திருந்தார்.

இருப்பினும் இந்த கேள்விக்கு பதில் வழங்கவேண்டும் என நளின் பண்டார தெரிவிக்க பிரதிச் சபாநாயகர் அதற்கு அனுமதி வழங்கியபோது, பிரதமர் தினேஷ் குணவர்தனவும் நேரத்தை வீண்விரயம் செய்ய வேண்டாம் என்றும் சபையை ஒத்திவைக்குமாறும் பிரதிச் சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து நளின் பண்டார கேள்வியெழுப்பியபோது அவரது ஒலிவாங்கியின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து கடும் வாக்குவாதம் இடம்பெற்றதால் பாராளுமன்ற அமர்வை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக பிரதிச் சபாநாயகர் அறிவித்தார்.

(அ)

# பாரம்பரிய உணவு வகைகளின் கண்காட்சி கிளிநொச்சியில்!




கிளிநொச்சி, ஓக. 24

கிளிநொச்சியில் பாரம்பரிய உணவு வகைகளின் கண்காட்சியும் விற்பனையும் நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவும், கிறிசலிஸ் நிறுவனமும் இணைந்து நடத்திய பாரம்பரிய உணவு வகைகளின் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி டிப்போ சந்தியில் அமைந்துள்ள பசுமை பூங்கா வளாகத்தில் முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமானது.

உள்ளூர் உற்பத்தியை, உற்பத்தியாளர்களின் சுயதொழிலினை மேம்படுத்துவதனூடாக, அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இன்போது எமது பாரம்பரிய நஞ்சற்ற உணவு வகைகளை காட்சிப்படுத்தும் முகமாக சுமார் 28 விற்பனைக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# காலி சிறைச்சாலையில் சுகாதார அவசர நிலை!

கொழும்பு, ஓக. 24

தற்போதைய நிலை காரணமாக காலி சிறைச்சாலையில் சுகாதார அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

காலி சிறைக்குள் பரவுகின்ற நோய் காரணமாக சமூகத்திற்குள் பக்ரீரியா பரவும் ஆபத்துள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

தொற்றுநோய் வைத்தியசாலையின் வைத்தியர் ஆனந்த விஜயவிக்கிரம இதனை தெரிவித்தார்.

சிறைச்சாலைக்கு சென்றவர்கள் கைதிகளுடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருந்தால் சிறையிலிருந்து பக்ரீரியா சமூகத்திற்குள் பரவுவதற்கான வாய்ப்புள்ளதாக அவர் கூறினார்.

எனினும் பக்ரீரியா சமூகத்துக்குள் பரவுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தொற்றுநோய்கள் தொடர்பிலான பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜி.விஜயசூரிய தெரிவித்தார்.

கைதிகளுக்கும் சிறைச்சாலைப் பணியாளர்களுக்கும் உரிய மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நோய்க்கான முக்கிய காரணத்தைக் கண்டறிவதற்கான விசாரணைகள் இடம்பெறுகின்றன என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சமீபத்தில் சிறைச்சாலைக்குச் சென்றுவந்த வெளிநபர்களைக் கண்டுபிடிக்குமாறு மருத்துவ அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

(அ)

# மதுப்போத்தல்களில் ஸ்ரிக்கர் ஒட்டுவதிலும் ஊழல் மோசடி?

## சபையில் வெளிப்பட்ட அதிர்ச்சி தகவல்

**கொழும்பு, ஓக. 24**

**வரி அல்லது தீர்வை செலுத்தப்படாத மதுபானங்களின் பாவனையை தடுப்பதையும் மற்றும் போலி பொருட்களை தடுக்கும் அதேவேளை தீர்வை வருமானத்தின் பாதுகாப்பை முன்னேற்றுவதையும் இலக்காக கொண்டு, நம்பகரமான ஸ்ரிக்கர் முறை அமுல்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்பட்டாலும், ஸ்ரிக்கர் முறையில் எவ்வாறு ஊழல் மோசடி நடைபெறுகிறது என்ற அதிர்ச்சி தகவலை ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க நேற்று பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தினார்.**

இந்த மோசடிகளில், மது வரி திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் நாயகம் கபில குமாரசிங்க தொடர்புபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று பாராளுமன்றத்தில் வாய்மூல கேள்வி நேரத்தில் இந்த தகவல் வெளிப்பட்டது.

கம்பஹாவிலுள்ள வீடொன்றின் முகவரியை சபையில் வாசித்து காட்டிய சுஜீவ சேனசிங்க, அங்கிருந்து ஒரு தொகை ஸ்ரிக்கர்கள் மதுபான நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

அந்த முகவரியுள்ள வீடு, மதுவரித் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் நாயகம் கபில குமாரசிங்கவுக்கு சொந்தமானது-என்றார் அவர்.

அத்துடன், பாசிக்குடாவில் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தரான சுமித் திசாநாயக்க என்பவர் சோதனைக்குச் சென்ற போது, மதுவரித் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் நாயகம் கபில குமாரசிங்க தொலைபேசியில் தொடர்பு கொண்டு, சோதனையை நிறுத்திவிட்டு திரும்புமாறு உத்தரவிட்டதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், மதுபான நிறுவனங்கள் விற்பனை நிலைய அனுமதிப்பத்திரம் பெற முடியாதென்ற விதியுள்ளபோது, போலி நிறுவனங்கள் மூலம் எவ்வாறு உரிமங்களை பெறுகிறார்கள் என்பதையும் வெளிப்படுத்தினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ரஞ்சித் சியம்பலபிட்டிய, இந்த விவகாரம் பற்றி விசாரிப்பதாகவும், சுஜீவ சேனசிங்க வெளிப்படுத்திய தகவல்களை விசாரணைக்குழுவிடம் கையளிப்பதாகவும் தெரிவித்தார்.

# அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு மருத்துவர்கள் சங்கம் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஓக. 24

அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு எதிர்காலத்தில் கடுமையான எதிர்ப்பை வெளியிட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி நாட்டுக்கு வரும்போது எதிர்ப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித்த அளுத்கே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்களுடன் கைகோர்த்துள்ள அநேகமான தொழிற்சங்கங்களில் தலைமைத்துவ மட்டத்தில் இருக்கும் பிரதிநிதிகள், ஜனாதிபதி செயலகத்துக்குச் சென்று கலந்துரையாடலுக்கு நேரமொன்றை ஒதுக்கி கொடுக்குமாறு கோரியிருந்தோம். இருந்தபோதும், தொழில் துறைசார்ந்தவர்களின் பொறுமையை தவறாக பயன்படுத்தி எங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்காமல் பிரச்னையை மூடிமறைப்பதற்கு இன்னும் அரசாங்கம் நம்பிக்கையுடன் இருந்தால் அதற்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம். எங்களின் பொறுமையை தவறாக பயன்படுத்த ஆட்சியாளர்கள் முயற்சித்தால் அதற்கான தகுந்த பதலடியை வழங்க நாங்கள் திட்டமிட்டுள்ளோம். செப்டெம்பர் 14 ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்தின் குழுக்கள் நாட்டுக்கு வரும்போது இந்த எதிர்ப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்துவோம்-என்றார். (அ)

# மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்க கையெழுத்து வேட்டையை ஆரம்பித்தது ஜே.வி.பி!

கொழும்பு, ஓக. 24

தோட்டத் தொழிலாளர்கள் உட்பட மலையக பெருந்தோட்ட மக்களுக்குரிய உரிமைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி கையெழுத்து திரட்டும் நடவடிக்கை ஹற்றனில் நேற்று ஆரம்பமானது.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் பெருந்தோட்ட தொழிற்சங்க கிளையான அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தால் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

“மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அவர்களின் பொருளாதார மேம்பாடு, வாழ்வாதார மேம்பாடு, உரிமைகள் தொடர்பில் எந்தவொரு அரசாங்கமும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், தோட்டத் தொழிலாளர்கள் உட்பட மலையக மக்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகளை வழங்குமாறு வலியுறுத்தியே



இவ்வாறு கையெழுத்து திரட்டப்படுவதாக” ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் கிட்ணன் செல்வராஜ், செயலாளர் டி.எம். பிரேமந்திர, உப செயலாளர் கலைச்செல்வி உள்ளிட்டோரின் பங்கேற்புடன் கையெழுத்து வேலைத்திட்டம் ஆரம்பமானது.

இதன்போது கருத்து வெளியிட்ட சங்கத்தின் செயலாளர், “ தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ள போதிலும் காணிப் பிரச்சினை, வீட்டு பிரச்சினை, கல்வி, சுகாதாரப் பிரச்னைகளுக்கு உரிய தீர்வு காணப்படவில்லை.

மாறாக தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பனவும் கொள்ளையடிக்கப்படுகின்றன. இதற்கு இடமளிக்க முடியாது. மக்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொடுக்க எமது சங்கம் முன்னின்று செயற்படும்.” என தெரிவித்தார். (அ)

# லிந்துலைக்குளத்தில் பெண் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஓக. 24

இளம் தாய் ஒருவரது சடலம் நேற்று குளத்தில் சடலமாக மீட்கப்பட்டதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

லிந்துல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லோகி தோட்டத்தில் வசித்து வந்த ஒரு பிள்ளையின் தாயான தயானி (வயது-26) சடலமாக மீட்கப்பட்டார். அவர் தனது ஒரு வயது மகளுடன் காணாமல்போயிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தயானி, தன்னையும் குழந்தையையும் தனது கணவர் மற்றும் கணவரின் குடும்ப உறுப்பினர்கள் துன்புறுத்துவதாக மூன்று பக்க கடிதம் எழுதியதாகவும், அந்த கடிதத்துடன் அவரது திருமணச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை ஏரிக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

லிந்துல லோகி தோட்டத்திலுள்ள தனது வீட்டுக்கு அருகில் உள்ள குளத்தில் பெண் தனது குழந்தையுடன் குதித்து தற்கொலை செய்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாக பொலிஸ் பரிசோதகர் சிசிர குமார தெரிவித்தார்.

தயானியின் சடலம் குளத்தில் மிதந்தது. குழந்தையின் சடலம் தேடப்படுகின்றது. (அ)

# 315 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டிய தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

கொழும்பு, ஓக. 24

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் தற்போது வரை இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதி மூலம் 315 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையானது 34 வீத ஏற்றுமதி வளர்ச்சி வீதத்தை எட்டியுள்ளதாகவும் மத்திய வங்கி அறிக்கைகள் மூலம் இது உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

“தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை, இந் நாட்டுப் பொருளாதாரத்துக்கு பாரிய அளவில் பங்களிப்பை வழங்குவதோடு குறிப்பாக, ஏற்றுமதி வருமானத்தின் மூலம் டொலர்களை எமக்கு பெற்றுத் தரக் கூடிய ஒரு நிறுவனமாகும். தற்போது நாம் இந்த நிறுவனத்தின் மேம்பாட்டுக்காக பல வேறு தீர்மானங்களை எடுத்துள்ளோம்.

அதன் மூலம் இந்நிறுவனத்தின் வருமானம் அதிகரித்துள்ளது. அந்த வகையில், நாம் 2022 ஜனவரி முதல் இந்த வருட ஆகஸ்ட் மாதம் வரை 230 மில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானத்தை பெற்றுள்ளோம். அது, இந்த வருடம் 315 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

மேலும் இந்த ஏற்றுமதி வருமானத்தின் மூலம் கிடைக்கும் டொலர்கள் உண்மையில் இலங்கைக்கு வருகின்றதா? என்று பலர் என்னிடம் கேட்டிருக்கின்றனர். ஏனெனில் கடந்த காலங்களில் அவ்வாறு கிடைக்க வேண்டிய வருமானம் உண்டியல் போன்ற பணப்பரிமாற்றங்கள் மூலம் இலங்கைக்கு கிடைக்காமல் போனது. எனவே இவற்றைத் தடுத்து நமது ஏற்றுமதி வருமானத்தின் மூலம் கிடைக்க வேண்டிய டொலர்களை இலங்கைக்கு பெற்றுக் கொள்வதற்கான பல்வேறு வேலைத்திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

அந்த வகையில் புதிய சுங்க அனுமதிப் பொறிமுறையொன்றை செயற்படுத்தியுள்ளதுடன் அதன் மூலம் இந்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் இரத்தினக்கல் தொடர்பான முழு விபரங்களை பெற்று, அதன் வருமானம் மீண்டும் இலங்கைக்கு கொண்டுவரப்படுகின்றதா என்பது குறித்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. -என்றார். (அ)

# பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களிடம் தலா ரூ.10 பில்லியன் நட்டஈடு கோரும் அநுர!

கொழும்பு, ஓக. 24

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி ஆகியோரிடம் தலா 10 பில்லியன் நட்டஈடு கோரி கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் போது அநுரகுமார திஸாநாயக்க தொடர்பில் அவதூறாக கருத்து வெளியிட்டமை தொடர்பில் நட்டஈடு கோரியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, சாகர காரியவசம் மற்றும் திஸ்ஸ குட்டியாராச்சி ஆகிய இருவரும் 14 நாட்களுக்குள் நட்டஈட்டுத் தொகையினை செலுத்துமாறு வலியுறுத்தி சட்டத்தரணி சுனில் வட்டகல ஊடாக இந்தக் கோரிக்கை கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்குள் குறித்த தொகையினை செலுத்தாத நிலையில் இருவர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சாகர காரியவசம் மற்றும் திஸ்ஸ குட்டியாராச்சி ஆகிய இருவரும் வெளிப்படுத்திய கருத்துக்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை எனவும், அவதூறு பரப்பும் வகையில் அமைந்துள்ளதாகவும் தமக்கு அறிவுறுத்தப்பட்டதாக சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்துள்ளார். (அ)

# சாய்ந்தமருது கூட்டுறவுச் சங்க மாதிரிக்கடை மூடப்பட்டுள்ளது!

பல லட்சம் பெறுமதியான பொருட்கள் முகாமையாளரால் மோசடி

சாய்ந்தமருது, ஓக. 24

**சாய்ந்தமருது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான மாதிரிக் கடை மூடப்பட்டுள்ளது. அதன் முகாமையாளர் பெரும் மோசடியில் ஈடுபட்டமை அம்பலமாகியுள்ளது.**

இந்த மாதிரிக்கடை திறந்து வைக்கப்பட்டு பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களையும் ஏனைய முக்கியமான பொருட்களையும் நியாயமான விலையில் விற்பனை செய்து வந்தது. அது மக்களுக்கு மிகவும் உதவியாகவும் இருந்தது.

ஆனால், மேற்படி மாதிரிக் கடை பல மாத காலமாக மூடப்பட்டிருப்பது பொதுமக்களின் கவனத்திற்கு வந்தவேளை, சங்க முகாமையாளரிடம் இது பற்றி விசாரணை செய்தபோது, மாதிரிக் கடை முகாமையாளர் சுக யீனம் காரணமாக விடுமுறையில் இருப்பதாகப் பதில் அறிவித்தார்.

இதனை ஏற்றுக் கொள்ளாத பொதுமக்கள் கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம் 2023.05.15ஆம் திகதி அரச தகவல் அறியும் சட்டதிட்டங்களுக்கு அமைவாக எழுத்து மூலம் கேட்டபோது, கூட்டுறவுச் சங்க ஆணையாளரின் 2023.06.20 ஆம் திகதிய கடிதப்படி மாதிரிக்கடை முகாமையாளர் சுகயீன விடுமுறையில் இருப்பதாகவும், ஆனால் மாதிரிக் கடை 2022.03.31ஆம் திகதி வருடாந்த இருப்பெடுப்பின் போது 1,284,297/59 சதம் பெறுமதியான பெருந்தொகைப் பொருட்கள் மாதிரிக்கடை முகாமையாளரினால் மோசடி செய்யப்பட்டுள்ளதை கல்முனை கூட்டுறவுச் சங்க உதவி ஆணையாளர் எழுத்து மூலம் அறிவித்தார்.

பொதுமக்கள் 2023.03.31 ஆம் திகதி வருடாந்த இருப்பெடுப்பின்போது ஏற்பட்ட குறைவு எவ்வளவு என்றும் மாதிரிக்கடை முகாமையாளரிடம் சங்கம் பெற்றுக்கொண்ட ரொக்கப் பிணை, ஆதனப்பிணை என்ற விவரங்களை அரச தகவல் அறியும் சட்ட திட்டங்களுக்கமைவாக கேட்டபோது சங்க நிர்வாகம் இதுவரை வெளிப்படுத்தவில்லை.

ஆகவே கூட்டுறவுத் திணைக்களம் இதனை விசாரணை செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ)

# நெல் உலர வைக்கும் களமாக மாறிவரும் பிரதான வீதிகள்!



காரைதீவு, ஓக. 24

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச வீதிகள் எல்லாம் தற்பொழுது நெல் உலர வைக்கும் களமாக மாறி வருகிறது.

அறுவடையின் பின்னர் நெல்லை உலர வைத்து சேமிக்கின்ற பழக்கம் விவசாயிகளிடம் உள்ளது .

கடந்த காலங்களில் வயல்களிலும் மைதானங்களிலும் இந்த உலர வைக்கும் செயல்முறை மேற்கொண்டு வந்தார்கள் .

ஆனால் அண்மைக் காலமாக பிரதான வீதியில் பெரும்பாலும் இந்த உலர வைக்கும் செயன்முறைதொடர்கிறது.

இதனால் மோட்டார் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கின்றது என்று பயணிகள் தெரிவிக்கின்றார்கள்.

(அ)



காரைதீவு வீரபத்திரர் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது.

# ‘தென்றல்’ சஞ்சிகையின் 60 ஆவது இதழ் வெளியீடு

நிந்தவூர், ஓக. 24

மட்டக்களப்பு கல்லடியிலிருந்து கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக வெளிவந்து சாதனை படைத்துக் கொண்டிருக்கும் “தென்றல்” சஞ்சிகையின் 60 ஆவது இதழ் வெளியீடும், 50 கலைஞர்கள் கௌரவிப்பும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

“தென்றல்” சஞ்சிகை ஆசிரியர் கதிரேசபிள்ளை கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் எம்.கோபாலரெத்தினம் பிரதம அதிதியாகவும், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த் சிறப்பு அதிதியாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இங்கு வெளியீடு செய்யப்படவுள்ள “தென்றல்” சஞ்சிகையின் 60 ஆவது மலரின் முதல் பிரதியினை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவரும், கொடைவள்ளலுமான விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி பெற்றுக் கொள்வார்.

60 ஆவது மலர் தொடர்பான அறிமுகவுரையினை “தென்றல்” சஞ்சிகையின் ஆசிரியர்பீட உறுப்பினர் இ.கோபாலபிள்ளை நிகழ்த்தவுள்ளார்.

இதன்போது நாடளாவிய ரீதியாகத் “தென்றல்” சஞ்சிகையின் வளர்ச்சிக்குத் தமது பங்களிப்பினை வழங்கிக் கொண்டிருக்கும் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், பாடகர்கள், இசையமைப்பாளர்கள், ஓவியர்கள், புகைப்படக் கலைஞர்கள் மற்றும் அனுசரணையாளர்கள் 50 பேர் “வீசுதென்றல்” விருது மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் “தென்றல்” கொடியேற்றப்பட்டுத் “தென்றல்” கீதம் இசைத்தலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-06)

# திடீர் பரிசோதனையில் பாவனைக்குதவாத பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன!

நிந்தவூர், ஓக. 24

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களை திடீர் பரிசோதனை செய்யும் நடவடிக்கை நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த திடீர் பரிசோதனை செய்யும் நடவடிக்கையில், மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற பொருட்களும், சுத்தம் செய்யப்படாமல் உணவு வகைகளை சமைக்கத் தயாராக இருந்த பொருட்கள், முறையற்ற விதத்தில் பாவிக்கப்பட்ட பாத்திரங்கள் மற்றும் ஒரு தடவை உபயோகித்த பின்னர் மீள்பாவனைக்காக வைக்கப்பட்ட எண்ணெய்கள் போன்றவை கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதுடன், உரிமையாளர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை செய்யும் நிலையங்களில் சுகாதார நடைமுறைகள் பேணப்படாமை, பாவனைக்குதவாத உணவுப்பண்டங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை தொடர்பில் பொதுமக்களினால் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து இந்த திடீர் பரிசோதனை செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.எல்.எம். நயீஸ் தெரிவித்தார்.

ஹோட்டல்களின் தரத்தைப் பேணும் வகையிலும், சுகாதார முறையில் சுத்தமான உணவு வகைகளை பொதுமக்களுக்கு வழங்கும் பொருட்டு உணவகங்களில் திடீர் பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும், ‘உணவே மருந்து, மருந்தே உணவு’ மனித நுகர்வுக்கு பொருத்தமற்றதைக் கண்டால் மக்கள் விழிப்புடன் இருந்து 067 - 2250834 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தெரியப்படுத்துமாறும் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.எல்.எம்.நயீஸ் தெரிவித்துள்ளார்.



இந்த திடீர் பரிசோதனை நடவடிக்கையில், பொது சுகாதார பரிசோதகர், அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட குழுவினர் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# மர்ஹூம் அஸ்வரின் 6ஆவது நினைவு தினம்



அக்கரைப்பற்று, ஓக. 24

முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வருடைய ஆறாவது நினைவு தினம் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறுகிறது.

முஸ்லிம் சமய கலாசார அமைச்சராகப் பணியாற்றிய அவர், தொடர்ந்து தேசியப்பட்டியல் மூலம் 5 முறை பாராளுமன்றத்துக்குத் தெரிவானார்.

இதேநேரம், முன்னாள் இராஜாங்க அமைச்சர் மர்ஹூம் ஏ.எச்.எம்.அஸ்வரின் ஆறாவது நினைவு தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்துள்ள நினைவு தின நிகழ்வு அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அக்கரைப்பற்று மாவட்ட காரியாலயத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் இடம் பெறவுள்ளது.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில், ஏ. மாஹிர் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில், முன்னாள் தேசியத் தலைவர் எம்.ஐ. உதுமாலெவ்வை மற்றும் முன்னாள் அதிபர் ஏ.ஏ கபூர் ஆகியோர் பிரதான உரையாற்றுவதோடு, முன்னாள் அதிபர் ஐ.எல்.ஏ. மஜீத் வரவேற்புரையையும் மாவட்ட செயலாளர் எம்.எச். அப்துல் வஹாப் நன்றியுரையையும் நிகழ்த்துவர்.

(அ)

# இந்திய மிசோரம் மாநிலத்தில் ரயில்வே மேம்பாலம் இடிந்தது!

## 17 பேர் உயிரிழப்பு

புதுடில்லி, ஒக. 24

**இந்தியாவின் மிசோரம் மாநிலம் சாய்ராங் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் ரயில்வே மேம்பாலம் இடிந்து விழுந்ததில் 17 பேர் உயிரிழந்தனர். பலர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.**

மிசோரம் தலைநகர் அய்ஸ்வாலில் இருந்து சுமார் 21 கி.மீ. தள்ளியிருக்கும் சாய்ராங் பகுதியில் நேற்று புதன்கிழமை 11 மணிக்கு இந்த துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

விபத்து நடக்கும்போது அங்கு 40 தொழிலாளிகள் பாலத்தில் வேலை செய்து வந்ததாக கூறப்படுகிறது.

இடிபாடுகளில் இருந்து இதுவரை 17 பேரின் உடல் மீட்கப்பட்டுள்ளதாகவும், பலர் காணாமல் போயிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்திருப்பதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மிசோ இளைஞர் சங்கத்தின் சாய்ராங் கிளையைச் சேர்ந்தவர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

விபத்து குறித்து வடகிழக்கு ரயில்வேயின் தலைமை செய்தித் தொடர்பாளர் சப்யசாச்சி தே கூறுகையில்,

"இடிந்து விழுந்த பாலம் வடகிழக்கு பகுதிகளின் அனைத்து தலைநகரங்களையும் இணைக்கும் இந்திய ரயில்வேயின் திட்டத்தின் ஓர் அங்கமாகும். கடந்த சில ஆண்டுகளாகவே பாலத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வந்தது. இந்த விபத்து சுமார் 11 மணியளவில் நிகழ்ந்திருக்கிறது. விபத்துக்கான காரணம் குறித்தும், விபத்து நடக்கும் போது எத்தனை பேர் பணியில் இருந்தனர் என்பது குறித்தும் இன்னும் கண்டறியப்படவில்லை" என்று தெரிவித்தார்.



இதனிடையே மிசோராம் முதல்வர் சோரம்தங்கா விபத்து குறித்து வருத்தம் தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் (ருவிட்டர்) தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

"அய்ஸ்வாலுக்கு அருகே உள்ள சாய்ராங் பகுதியில் கட்டப்பட்டு வந்த பாலம் இன்று இடிந்து விழுந்து விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் சுமார் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன. இந்தத் துயரம் குறித்து அறிந்து மிகவும் வேதனையடைந்தேன். விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். காயம் அடைந்தவர்கள் விரைவில் குணமடைய வாழ்த்துகிறேன்.

மீட்புப் பணிகளில் பெருமளவில் வந்து உதவிய மக்களுக்கு எனது அன்பினைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறியுள்ளார்.

இந்தப்பாலம், பைராபி மற்றும் சாய்ராங் ரயில் நிலையங்களுக்கு இடையே குருங் ஆற்றின் மீது கட்டப்பட்டு வருகிறது. இந்த பாலத்தின் ஒரு தூணின் உயரம் மட்டும் 104 மீற்றர்கள், மிசோரம் தலைநகர் அய்ஸ்வாலை அடையும் முன்பாக சாய்ராங் கடைசி நிலையமாக இருக்கும் வகையில் இந்த பாலம் கட்டப்பட்டு வந்தது. இந்தப் பாலத்தின் கட்டுமானப் பணிகள் முடிந்ததும் அய்ஸ்வால் தேசிய ரயில் பாதைகளுடன் இணைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



# உளவு பார்த்த உக்ரைனின் கப்பலை கருங்கடலில் சுட்டு மூழ்கடித்த ரஷ்யா

மொஸ்கோ. ஒக. 24

ரஷ்யாவின் கருங்கடல் கடற்பரப்பில் உக்ரைனிய உளவு கப்பலை எஸ்.யு -30 என்ற விமானத்தின் ஊடாக சுட்டுவீழ்த்தியதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

ரஷ்யா எரிவாயு சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளும் இடத்தை உளவு நோக்கில் இந்த கப்பல் பயணத்தால் இவ்வாறு சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் உக்ரைன் தரப்பில் இருந்து எவ்வித கருத்துகளும் வெளியாகவில்லை.

2014 இல் உக்ரைனுக்கு சொந்தமான பகுதியாகவிருந்த கைப்பற்றி, கிரிமியாவை ரஷ்ய படைகள் கைப்பற்றியதுடன், அதனை ரஷ்யாவுடன் இணைத்தமைக்கான பொதுவாக்கெடுப்பு பொன்றை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் நடத்தியிருந்தார்.

2014ஆம் ஆண்டுமுதலே இருநாடுகளுக்கும் போர் பதற்றம் நிலவிவந்த சூழலில் கடந்த ஆண்டு அது போராக வெடித்தது.

இருநாடுகளும் தொடர்ந்து மாறி மாறி தாக்குதல்களை நடத்திவருவதுடன், உக்ரையின் பல பகுதிகள் இன்னமும் ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

ஆரம்பத்தில் ரஷ்யாவின் தாக்குதல்களுக்கு உக்ரைன் முகங்கொடுக்க முடியாது பின் வாங்கிய போதிலும் ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்க இராணுவத்தின் உதவியளிப்பால் உக்ரைன் ரஷ்யாவுக்கு எதிரான போரில் பலமடைந்து வருகிறது.

ரஷ்யா கைப்பற்றியிருந்த பல பகுதிகளை உக்ரைன் இராணுவத்தினர் மீட்டும் வருகின்றனர்.

இந்நிலையில், ரஷ்ய கருங்கடல் பகுதியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை கண்காணித்தான குற்றச்சாட்டில் இன்று உக்ரைனின் உளவு கப்பலை சுட்டுவீழ்த்தியுள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது. ஆனால், அதற்கு இன்னமும் உக்ரைன் பதிலளிக்கவில்லை. (அ)

# பிரித்தானிய மன்னர் சார்ள்ஸ்க்கு சொந்தமான ஆட்டுக்குட்டிகளை திருடியதாக 3 பெண்கள் கைது!

லண்டன், ஒக. 24

பிரித்தானிய மன்னர் சார்ள்ஸின் சாண்ட்ரிங்ஹாம் எஸ்டேட்டில் இருந்து ஆட்டுக்குட்டிகளை திருடியதாக மூவர் கைது செய்யப்பட்டனர்.

அதன்படி 23 வயதான சாரா போமி, 34 வயதான ரோஸ் பேட்டர்சன் மற்றும் 23 வயதான ரொசா ஷார்க்கி ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

ஆனால் அனிமல் ரைசிங் என்னும் குழுவே இந்த சம்பவத்தின் பின்னணியில் இருப்பதாக கூறப்படுகிறது.

அந்த அமைப்பை சேர்ந்த மூன்று பெண்கள் வயல் வழியாக நடந்து சென்று, மூன்று ஆட்டுக்குட்டிகளைப் பிடித்து வாகனம் ஒன் றில் ஏற்றியுள்ளனர்.

ஆனால் கால்நடைகளை ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்து செல்லும் போது கடைப் பிடிக்க வேண்டிய விதிகளை மூவரும் கடைப்பிடிக்கவில்லை என குற்றச்சாட்டு எழுந்தது.

அதே போல பாதுகாக்கப்பட்ட விலங்குகளுக்கு தேவையற்ற துன்பத்தை ஏற்படுத்திய தாகவும் மூவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இதை தொடர்ந்து சாரா,



ரோஸ், ரொசா ஆகிய மூவரும் காவல்துறையில் சரணடைந்தனர்.

இந்த நிலையில் கைதான மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் அடுத்த மாதம் 28ஆம் திகதி நீதிபதிகள் முன்னர் ஆஜராகவுள்ளனர். (அ)

# வயலுக்குள் இறங்கிய வடகொரிய ஜனாதிபதி

பியொங்யாங், ஒக. 24



வடகொரியாவில் கடல் சீற்றம் காரணமாக நிலப்பகுதிகளில் கடல் நீர் புகுந்ததால் ஏற்பட்ட வெள்ளத்தில் சுமார் 560 ஹெக்டேயர் பயிர் நிலங்கள் அழிவடைந்துள்ளன.

அழிவுகளை பார்வையிட்டுள்ள வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன், இது அதிகாரிகளின் பொறுப்பற்ற செயல் காரணமாக நடந்துள்ளதாக அதிகாரிகளை கடுமையாக சாடியுள்ளார்.

கிம் ஜோங் உன் வடகொரியாவின் கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள விவசாய நில மறுசீரமைப்புத் திட்டப் பணிகளை பார்வையிடச் சென்றுள்ளார்.

கடல் அலையின் சீற்றம் காரணமாக கடல் நீர், வயல் நிலங்களுக்குள் புகுந்து 270 ஹெக்ரேயரில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் உட்பட 560 ஹெக்ரேயர் நிலம் அழிவடைந்துள்ளது.

இந்த அழிவுகளை பார்வையிட்ட ஜனாதிபதி கிம், நாட்டின் பிரதமர் கிம் டோக் ஹூன் மற்றும் அதிகாரிகளின் பொறுப்பற்ற செயல் என சாடியுள்ளார்.

மேலும் நாட்டின் பொருளாதாரத்தை வீணடித்துவிட்டதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக கிம் டோக் ஹூன் அமைச்சரவையின் நிர்வாகம், பொருளாதார நிலைமை என்பன மிகவும் சீர்குலைந்துள்ளதாகவும் வடகொரிய அரசு செய்தி நிறுவனமான கே.சி.என்.ஏ தெரிவித்துள்ளது. (அ)

# பாகிஸ்தானின் ரூபாய் வரலாறு காணாத வீழ்ச்சி

இஸ்லாமாபாத், ஒக. 24

இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் காரணமாக பாகிஸ்தானில் ரூபாயின் பெறுமதி வரலாறு காணாத அளவு வீழ்ச்சிகண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

டொலருக்கான கேள்வி அதிகரித்த நிலையிலே இவ்வாறான தொரு நிலைமை ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அந்நிய செலாவணி வெளியேறுவதனை தடுக்கும் வகையில் கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் பாகிஸ்தானில் இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

பொருளாதார நெருக்கடி நிலைமையினை தவிர்க்கும் வகையில் சர்வதேச நாணய நிதியம் பாகிஸ்தானுக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலரினை கடனாக வழங்கியுள்ளது.

இந்த நிலையில், கடந்த ஜூன் மாதம் முதல் இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவதே சர்வதேச நாணய நிதிய கடன் உதவித் திட்டத்தின் முக்கிய நிபந்தனையாக விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, டொலருக்கு நிகராக ரூபாவின் பெறுமதி 0.6 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், டொலர் ஒன்றின் பெறுமதி 299 ரூபாவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

காபந்து அரசாங்கத்தினால் ஆளப்படும் பாகிஸ்தான் மக்கள் கடுமையான அரசியல் பதற்றம், பணவீக்கம் மற்றும் வட்டி வீதம் ஏனோஅவற்றுடன் போராடுகின்றனர்.

இதனிடையே, டொலருக்கு நிகராக ரூபாவின் பெறுமதி 295 முதல் 305 ரூபா வரை உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்வு, பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான நிலுவைத் தொகையை நீக்குதல் ஆகியனவே இந்த வீழ்ச்சிப் போக்குக்கு முக்கிய காரணமென ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த குழு

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 24


**காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுப்பதற்கான இலங்கையின் மூலோபாயவேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரச மற்றும் தனியார் துறைகளை உள்ளடக்கிய தேசிய ஆலோசனைக் குழுவொன்றை நிறுவ வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.**

அந்தக் குழுவானது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கூடி செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பிலான மீளாய்வுகளை மேற் கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

காலநிலை மற்றங்களுக்கு ஈடுகொடுப்பதற்கான இலங்கையின் முன்னேற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற மீளாய்வு கூட் டத்திலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

துறைசார் முன்னோடிகள் நிபுணர் கள் உள்ளிட்ட பலரது பங்கேற்புடன் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய காலநிலை மாற்றங்களை எதிர் கொள்வதற்காக ஒரு நாடு என்ற வகையில் கொண்டிருக்க வேண்டிய மூலோபாய திட்டம் குறித்து ஆராயப்பட்டது.

அனைத்து நடவடிக்கைகளின் போதும் நிதி முக்கிய காரணியாக காணப்படுவதாகவும், காலநிலை மாற்றங்களுக்கு ஈடு கொடுப்பதற்கு உகந்த வகையில்



வலுவான பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அத்துடன், காலநிலை மாற்றங்களை வெற்றிகொள்வதற்காக சர்வதேச உடன் படிக்கைகள் மற்றும் நிகழ்ச்சி நிரல்களுக்கு இணங்கிச் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

மேலும், இலங்கையில் நிறுவப்படவிருக்கும் காலநிலை மாற்றம் தொடர்பிலான சர்வதேச பல்கலைக்கழகத்தை சர்வதேச ஆய்வுக்கான கேந்திர நிலையமாக நடத்திச் செல்லும் அதே நேரம் காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்தவது தொடர்பிலான இலங்கையின் அர்ப்பணிப்பை அதனூடாக அடையாளப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட், காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, சுற்றாடல், காலநிலை மற்றும் பசுமை நிதி தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆனந்த மல்லவதந்திரி, நிதி அமைச்சின் செயலாளர் கே.எம். மஹிந்த சிறிவர்தன, சுற்றாடல் அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க உள்ளிட்ட பலரும் இந்த கலந்துரையாடலில் பங்கெடுத்திருந்தனர்.

(அ)

# கைதிகளை அங்குனுகொலபெலெஸ்ஸ சிறைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை

கொழும்பு, ஓக. 24

நீதிமன்ற உத்தரவிற்கு அமைய காலி சிறைச்சாலைக்கு அனுப்பப்படும் கைதிகளை அங்குனு கொலபெலெஸ்ஸ சிறைச்சாலைக்கு கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காலி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் நீதிமன்ற நடவடிக்கைகளை காணொளி தொழில்நுட்பத்தின் ஊடாக முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க குறிப்பிட்டார்.

காலி சிறைச்சாலையில் கைதிகளிடையே மெனிங்கோகொக்கல் எனப்படும் நோய் பரவுவது காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நோய் பரவுவதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஜீ.விஜேசூரிய தெரிவித்தார்.

இதற்காக காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையினூடாக நோயெதிர்ப்பு மருந்தும் வழங்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நோய்த் தாக்கத்திற்குள்ளான இரண்டு கைதிகள் அண்மையில் உயிரிழந்தனர்.

மேலும் 07 பேர் தற்போது காலி - கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர்களில் இருவர் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஜீ.விஜேசூரிய தெரிவித்தார்.

(அ)

### மிக் கொடுக்கல் வாங்கல் வழக்கு:

# உதயங்க வீரதுங்க வெளிநாடு செல்லலாம்

கொழும்பு, ஓக. 24

முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவிற்கு வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் மிக் விமான கொடுக்கல் வாங்கல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 22 ஆம் திகதி வரை வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்குமாறு உதயங்க வீரதுங்க மன்றில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இலங்கை விமான படைக்கு உக்ரைனில் இருந்து மிக் விமானங்களை கொள்வனவு செய்த போது, முறையற்ற வகையில் தலையீடு செய்து, கோடிக்கணக்கான பணத்தை மோசடி செய்தமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகள் உதயங்க வீரதுங்க மீது சுமத்தப்பட்டுள்ளன.

(அ)

# சரத் வீரசேகரவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்

## சுமந்திரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஓக. 24

பாராளுமன்ற நிலையியற் கட்டளையை மீறும் வகையில் செயற்பட்ட, ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவுக்கு எதிராக சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேட்டுக் கொண்டார்.

முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக நேற்று முன் தினம் சரத் வீரசேகரவினால் தெரிவிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பாக, நேற்று பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர, முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி மனநலம் பாதிக்கப்பட்டவர் என தெரிவித்திருந்தார்.

அத்தோடு, அவரது மனைவி தொடர்பாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இது நிலையியற் கட்டளை 83 ஐ மீறும் செயற்பாடாகும். எவருடைய தனிப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் சபையில் கருத்து வெளியிட முடியாது.

இவ்வாறு இருக்கும்போது, சரத்வீரசேகர இவ்வாறு இவர் கருத்து வெளியிடுவது இரண்



டாவது தடவையாகும்.

ஏற்கனவே, அவர் சட்டத்தரணிகள் சங்கத்தையும் என்னையும் கடுமையாக விமர்சித்திருந்தார்.

நான் பாராளுமன்றில் எந்தவொரு நீதிபதியையும் பெயர்குறிப்பிட்டு கருத்து வெளியிடவில்லை.

நீதிபதிகளின் கருத்துக்கள் தொடர்பாக விமர்சிக்கலாமே ஒழிய, நீதிபதியின் தனிப்பட்ட விவகாரம் குறித்து பேச முடியாது.

ஒரு தமிழ் நீதிபதி எப்படி தன்னை விமர்சிக்க முடியும் எனும் தொனியில்தான் அவர் கருத்து வெளியிட்டிருந்தார். இது பாரதூரமான விடயமாகும்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் நடத்தைக்கு உரிய வகையில் அவர் நடந்து கொள்ளவில்லை.

எனவே, சபாநாயகர் இவருக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்- என்றார்.

(அ)

# கடற்கரையோரங்களில் இருந்து 14 கடலாமைகளின் உடல் மீட்பு!

## இறப்பிற்கான காரணத்தை கண்டறிய விசாரணை

கொழும்பு, ஓக. 24

கடந்த 48 மணித்தியாலங்களில் மேற்கு கடற்கரையில் 14 ஆமைகள் இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இந்த உயிரிழப்புகளுக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை.

வெள்ளவத்தையில் இருந்து காலி முகத்துவாரம் வரையான கரையோரத்திலும் நீர்கொழும்பு - சரக்குவ, பமுனுகம, கல்கிசை கரையோரங்களிலும் இறந்த நிலையில் கடல் ஆமைகள் மீட்கப்பட்டுள்ளன.

வெள்ளவத்தை தொடக்கம் காலி முகத்துவாரம் வரையான கடற்கரையில் நேற்று முன்தினம் 7 இற்கும் மேற்பட்ட ஆமைகளின் சடலங்கள் குவிந்திருந்தன.

நேற்று காலை நீர்கொழும்பு - சரக்குவ கடற்கரையில் உயிரிழந்த நிலையில் 05 கடலாமைகள் கரையொதுங்கின.

பமுனுகம கடற்கரையிலும் உயிரிழந்த நிலையில் இரண்டு கடலாமைகள் கரையொதுங்கியிருந்ததுடன், கல்கிசையில் மற்றுமொரு கடலாமையும் இறந்த நிலையில் கரையொதுங்கியது.

இந்நிலையில், கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்த வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினர்,

காலி முகத்திடலில் கரையொதுங்கிய 04 கடலாமைகளின் உடல்களையும் மன்றில் முன்வைத்தனர்.

பிரேத பரிசோதனையை நடத்தி, கடலாமைகளின் மரணத்திற்கான காரணத்தை கண்டறியுமாறும் அது தொடர்பில் மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் கோட்டை நீதவான் திலின கமகே கால்நடை வைத்தியருக்கு இதன்போது உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே, 03 நாட்களாக சிலாபத்திற்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் கறுப்பு நிற எண்ணெய் படலம் மிதந்தமையை காண முடிந்தது.

இதனால் குறைந்தளவான மீன்களே கிடைத்ததாக மீனவர்கள் தெரிவித்தனர்.

கடலாமைகள் கண்டெடுக்கப்பட்ட கடற்கரையிலிருந்து 20 கடல்மைல் தொலைவிலேயே தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் சிதைவுகள் காணப்படுகின்றன.

(அ)

# பாடசாலை மாணவர்களிடையே புகையிலை பயன்பாடு அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 24

பாடசாலை மாணவர்களிடையே புகையிலை பாவனை அதிகரித்துள்ளதாக தேசிய அபாயகரமான போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று வருடங்களுடன் ஒப்பிடுகையில் ஐஸ் மருந்துகளின் பாவனையில் சிறிதளவு குறைந்துள்ளதாக அதன் தலைவர் சக்கிய நாணயக்கார சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு குறிப்பிட்ட குழு மாணவர்களிடையே புகையிலை பயன்படுத்தப்படுவதாகவும், அது போதைப்பொருளுக்கு திரும்பும் போக்கைத் தூண்டுவதாகவும் வாரியம் மேலும் கூறியது.

(அ)

## பிரிவினை...

ளதாக நீதியான சமுதாயத்திற்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், குறித்த அறிக்கைகள் தொடர்பில் ஆழ்ந்த கவலையடைவதாக அதன் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாட்டின் அமைதி மற்றும் மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கும் எந்தவொரு செயலுக்கும் ஆதரவளிக்க வேண்டாம் என ஒட்டு மொத்த தேசத்தையும் அவர் கேட்டுக்கொண்டார்.

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர்,

"நமது தாய்நாட்டில் மீண்டும் இரத்தக்களரியை ஏற்படுத்தும் எந்தவொரு செயலுக்கும் நாம் வார்த்தைகளாக பேசவோ அல்லது சம்மதிக்கவோ கூடாது. தேசத்தின் பெயராலும், நாட்டின் வருங்காலக் குழந்தைகளின் பெயராலும், அகிம்சையின் உன்னதப் பாதையில் நம்மை வழிநடத்திய ஆசிரியர்களின் பெயராலும் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன்.

மத போதனைகளை அடிப்படையாகக் கொண்ட ஒவ்வொரு தத்துவமும், புனிதமானதாகக் கருதப்படும். ஒவ்வொரு மதச் சின்னமும் முழு மனித இனத்தின் புனிதப் பாரம்பரியமாகும். அவை ஒரு இனத்திற்கோ அல்லது மத சமூகத்திற்கோ மட்டும் வரையறுக்கப்பட்ட உரிமைகளோ அல்லது பௌதிகப் பொருட்களோ அல்ல என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

மேலும், தொல்பொருள் மதிப்புடைய எந்தவொரு பௌதிக பொருளும் அல்லது பிராந்தியமும் முழு மனித சமூகமும் பெருமைப்படக்கூடிய உலக பாரம்பரியமாக கருதப்பட வேண்டும். ஒரு தேசத்தின் மகத்துவம் அல்லது ஒரு மதத்தின் மேன்மை என்பது அவர்கள் மூலம் முழு உலகத்தின் அருளாளர்களின் சிறந்த நற்பண்புகள் மற்றும் வழிகாட்டுதலின் மீது தங்கியுள்ளது.

அந்த மஹாசார குணங்களை இழிவுபடுத்துவதன் மூலம் தீவிரவாத, மேலாதிக்க மற்றும் வன்முறைச் செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே, தங்கள் மதம், பிறந்த நாடு, கலாசார பாரம்பரியத்தின் மீது உண்மையான அன்புடன் செயல்படும் அனைவரும் பிரிவினைவாதிகளின் தந்திரங்களில் சிக்காமல் கவனமாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் மதத்திற்காக நாட்டுக்கு அல்லது தேசத்திற்கு எந்தவிதமான எதிர்மறையும் இல்லாமல் உழைத்து அடுத்த தலைமுறை ஒரு நல்ல நாட்டைப் பெறுவதற்கு பொறுப்புடன் உழைக்க வேண்டும்-என்றார். (அ)

## இந்திய...

சங்கத்தின் கூட்டத்தில் உரையாற்றும் போதே தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை - இந்திய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் ஊடாக பரிமாற்ற வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய சபாநாயகர், இந்தியா வழங்கிவரும் ஆதரவுகளுக்கு நன்றி தெரிவித்தார்.

இங்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் காணொலி செய்தி மூலம், இந்நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இந்தியா தொடர்ந்து ஆதரவளிப்பதாகத் தெரிவித்தார்.

இலங்கை - இந்திய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட அங்கத்துவ உறுப்பினர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர ஆகியோர் இதன்போது கலந்துகொண்டனர். (அ)

## 8,000 ஆசிரியர்...

இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார்,

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் கல்வி அமைச்சர் என்ற வகையில் கல்வித் துறையின் முன்னேற்றம் குறித்து விசேட கவனம் செலுத்தி வருவதாகவும், கல்வித் துறையில் பல்வேறு மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்வதற்கான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருதாகவும் தெரிவித்தார்.

நவீன உலகுக்கு முகங்கொடுக்கக் கூடியவாறு, எமது மாணவர்களை தயார்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், அதற்காக விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கலைத்துறை, கணிதவியல் உள்ளிட்ட பாட விடயதானங்களை உள்ளடக்கிய வகையில் "ஸ்ரீம்" என்ற தொனிப்பொருளில் எதிர்காலத்தில் கல்வி மறுசீரமைப்புகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் இதன்போது கூறினார்.

க.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகள் நிறைவடைந்த பின்னர் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை மாணவர்கள் தமது நேரத்தை வீணாகக் கழிப்பதைத் தவிர்க்கும் வகையில், அவர்களுக்கு ஆங்கிலம், தொழில்நுட்பம் மற்றும் தொழிற்பயிற்சிகளுடன் கூடிய பாடநெறிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும், இது மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள உதவும் என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, அண்மையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இருந்து வெளியேறிவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தற்போது பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிக்கவும் மேலும் இரண்டாம் மொழி ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்கும் அவசியமான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அந்த வகையில் ஏற்கனவே சுமார் 8000 பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதோடு, எதிர்காலத்தில் மேலும் 5500 பட்டதாரிகள், ஆசிரியர்களாக இணைத்துக்கொள்ளப்படுவார்கள் என்றும் மேலும், 2500 இரண்டாம் மொழி ஆசிரியர்களும் நியமிக்கப்பட உள்ளனர் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (அ)

## சந்திரனின்...

செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ சந்திரயான்-3 விண்கலத்தை கடந்த ஜூலை 14ஆம் திகதி சிறீஹரிகோட்டாவில் இருந்து எல். வி. எம். -3 ஏவூர்தி (Rocket) மூலம் மதியம் 2.35 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.

இதனைத் தொடர்ந்து, கடந்த ஓகஸ்ட் முதலாம் திகதி புவியீர்ப்பு விசையில் இருந்து விலக்கப்பட்டு நிலவை நோக்கி செல்லும் வகையில் சந்திரயான் -3இன் பயணப் பாதை மாற்றப்பட்டது. தொடர்ந்து 5 நாள் பயணத்துக்கு பின் கடந்த 5ஆம் திகதி சந்திரனின் சுற்றுவட்டப்பாதைக்குள் சந்திரயான்-3 நுழைந்தது. கடந்த 17ஆம் திகதி பிற்பகல் 1.15 மணிக்கு சந்திரயான்-3 விண்கலத்தில் இருந்து விக்ரம் தரையூர்தி பிரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சந்திரனுக்கு 153 x 163 கி. மீ. தொலைவில் தரையிறங்கி பயணித்து வந்தது. அதில் இருந்து தரையிறங்கியின் (Lander) உயரம் படிப்படியாக குறைக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், நேற்று புதன்கிழமை இலங்கை நேரப்படி மாலை 6.02 மணிக்கு சந்திரயான்-3ஐ நிலவில் தரையிறக்கத் திட்டமிடப்பட்டது. காலை முதல் தரையூர்தியை தரையிறக்குவதற்கான வேலையில் இஸ்ரோ விஞ்ஞானிகள் ஈடுபட்டு வந்தனர். இதனை தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு தரையூர்தியை தரையிறக்கும் பணியை விஞ்ஞானிகள் தொடங்கினர். தரையிறங்கியின் உயரம் படிப்படியாக குறைக்கப்பட்டு தரையூர்தி சந்திரனை நோக்கி பயணித்தது.

இதனைத் தொடர்ந்து நிலவின் தென்துருவத்தில் விக்ரம் தரையூர்தி மாலை 6.02 மணிக்கு வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டது. அப்போது, இஸ்ரோ விஞ்ஞானிகள் உள்ளிட்டோர் கைகளை தட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இதனை தொடர்ந்து, வரலாற்று சிறப்பு மிக்க இந்த சாதனை குறித்த அறிவிப்பை இஸ்ரோ தலைவர் சோம்நாத் அறிவித்தார். இந்தியா தற்போது சந்திரனின்மீது இருப்பதாக அவர் பெருமிதம் பொங்க குறிப்பிட்டார்.

தனது விண்வெளி பயணத்தில் புதிய மைல் கல்லை எட்டியுள்ளது. சந்திரயான் சந்திரனை அடைந்ததைத் தொடர்ந்து இந்தியாவின் வெற்றியை தெரிவித்த இஸ்ரோ தலைவர் "இந்தியா நிலவில் உள்ளது" என்று அறிவித்தார்.

சந்திரயான் - 3 சந்திரனில் வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டமைக்கு நாஸா, இந்திய ஜனாதிபதி, பிரதமர் மோடி மற்றும் உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் இஸ்ரோவுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். தங்கள் நாட்டின் இந்த சாதனையை இந்திய மக்கள் கொண்டாடி வருகின்றனர். (ஐ)

## 13ஐ செயல்படுத்த...

சுமார் ஒரு வருடத்தின் பின்னர் யாழ்ப்பாணம் வந்துள்ள அமெரிக்க தூதுவர் வடக்கை மையப்படுத்திய அரசியல் விவகாரங்களை அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்டினார் என்றும், ஜனாதிபதி தேர்தல் வெற்றி வாய்ப்புகள் குறித்தும் அவர் கட்சிகளின் கருத்துகளை கேட்டறிந்தார் எனவும் கட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்.

வடக்கின் காணி அபகரிப்பு, பௌத்த மத ஆக்கிரமிப்பு பற்றியும் கேட்டறிந்தார். குருந்தூர்மலையில் பௌத்த பிக்குகள் தலைமையிலான குழுவின் செயல்கள் குறித்தும் கேட்டறிந்தார்.

வடக்கில் பௌத்தர்கள் இருக்கிறார்களா என்று சந்திப்பில் அமெரிக்க தூதர் கேட்டார்.

அப்படி யாரும் இல்லையென்பதையும் தற்போது இராணுவத்திடம் சம்பளம் பெறும் ஒருவர், நிவாரணம் வழங்குவதாக ஏழை மக்களை ஏமாற்றி தமிழர்களுக்கு எதிராக பல்வேறு கூத்தாடினாலும் அதை சமூகம் கண்டுகொள்ளவில்லை என்றும் இதன்போது தமிழ் தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுவிப்பு விவகாரங்களின் தற்போதைய நிலை பற்றியும் கேட்டறிந்தார்.

அத்துடன், இந்த சந்திப்பில், மாகாண சபை தேர்தலை நடத்துவதில் உள்ள சிக்கல், புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் உள்ளிட்ட விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. தமிழ் இளைஞர்கள் பெருந்தொகையாக நாட்டை விட்டு வெளியேறுவது பற்றியும் கேட்டறிந்தார். இதனால் ஏற்படும் சாதக, பாதகங்கள் பற்றியும் விரிவாக கேட்டறிந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ராஜபக்ஷக்களின்...

பட்ட கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் குறித்து மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி காணப்படுகின்றபோதிலும் 2024 ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷக்களுக்கு போட்டியிடுவதற்கான அனுமதி வழங்கப்படும் என மிலிந்த மொரகொட தெரிவித்தார்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு தற்போதைய அரசாங்கத்தில் ராஜபக்ஷக்களின் பிரதிநிதித்துவம் உள்ளது அரசாங்கத்தில் ராஜபக்ஷக்களின் குடும்பத்தவர்கள் பலர் உள்ளனர் என அவர் கூறினார். (அ)

## வழிப்பறியில்...

வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மானிப்பாய் பகுதிகளில் வீதியால் செல்லும் பொதுமக்களிடம் நேரம் கேட்பது, வழி கேட்பது போன்று பாசாங்கு செய்து வழிப்பறியில் இந்த கும்பல் ஈடுபட்டு வந்துள்ளது.

அத்துடன், இந்தக கும்பல் ஐந்து சைக்கிள்களையும் திருடியுள்ளனர்.

இவை தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் அடிப்படையில், சாவல்கட்டு பகுதியை சேர்ந்த 20 மற்றும் 21 வயதுக்குட்பட்ட ஐவரை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர். அத்துடன், திருடப்பட்ட ஐந்து சைக்கிள்களையும் அவர்களிடம் இருந்து மீட்டனர்.

மேலதிக விசாரணைகளை தொடர்ந்து இவர்கள் அனைவரும் சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதில், நால்வர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் என கண்டறியப்பட்டது.

அதன் பின்னர் மருத்துவ அறிக்கையுடன் ஐவரையும் பொலிஸார் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவர்களில் போதைக்கு அடிமையான நால்வரையும் பொலநறுவை - கந்தக்காடு மறுவாழ்வு மையத்துக்கு அனுப்ப உத்தரவிட்டார் நீதிவான். மற்றைய நபரை விளக்கமறியலில் வைக்கவும் கட்டளையிட்டார். (ஐ-ரி)

## உள்ளூராட்சி...

மும் கலந்துகொண்டார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்த முடியாத பட்சத்தில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ள சுற்றறிக்கையை இரத்துச் செய்யுமாறு அரசு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோருவதற்கும் பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று இந்த வாரம் பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுடன் இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தயாராக இருப்பதாகவும் அறியமுடிகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனுவைச் சமர்ப்பித்த அனைத்து வேட்பாளர்களுக்கும் வழமையான சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளதாகவும் அதனால் அந்தப் பிரதேசங்களில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களும் கருத்து தெரிவித்துள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# 54ஆவது ஜெனிவா தொடர் செப்ரெம்பர் 11 இல் ஆரம்பம்

## இலங்கை தொடர்பில் ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு, ஓக. 24

**ஜெனிவாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடரின்போது இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகி, ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி வரையான ஒரு மாதகாலத்துக்கு நடைபெறவுள்ளது.**

இக்கூட்டத்தொடர் குறித்த ஒழுங்கமைப்புக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெறவிருப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தெரிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் கூட்டத்தொடரின்போது ஏற்கனவே இலங்கை தொடர்பில் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தலைப்பிலான 51⁄1 தீர்மானத்தின் உள்ளடக்கங்களின் அமுலாக்கத்தில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத்தொடரின்போது இலங்கை தொடர்பில் 46/1 என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தின் பிரகாரம் இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டல், மதிப்பீடு செய்தல் மற்றும் பாதுகாத்தல் என்பவற்றுக்கான ஆணை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்துக்கு வழங்கப்பட்டது.

இத்தீர்மானம் கடந்த ஆண்டு நடைபெற்ற கூட்டத்தொடரில் மீளவலியுறுத்தப்பட்ட நிலையிலேயே, எதிர்வரும் 54 ஆவது கூட்டத்தொடரில் இத்தீர்மானம் சார்ந்த முன்னேற்றங்கள் குறித்து ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கை வெளியிடப்படவுள்ளது.

இக்கூட்டத்தொடரில் இலங்கை மீதான புதிய தீர்மானங்கள் எவையும் நிறைவேற்றப்படாது. இருப்பினும் கடந்த ஜூன் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற 53 ஆவது மனித உரிமைகள் பேரவைக்கூட்டத்தொடரின்போது இலங்கை குறித்து பதில் ஆணையாளர் நாடா அல்-நஷீப்பினால் வாசிக்கப்பட்ட வாய்மொழிமூல அறிக்கையில் மிகவும் காட்டமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததன் காரணமாக, இம்முறை வெளியிடப்படவுள்ள எழுத்துமூல அறிக்கை இலங்கைக்கு மேலும் அழுத்தம் பிரயோகிக்கும் வகையில் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க இலங்கையின் கடந்தகால மற்றும் தற்போதைய மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் தேசிய ரீதியில் இயங்கிவரும் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் இணைந்து விரிவான அறிக்கைகளை அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாக அறியமுடிகின்றது. (அ)



## சிவபூமி முதியோர் இல்லத்துக்கு படை பிரிவினரால் உணவளிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 24

சிவபூமி முதியோர் இல்லத்திற்கு நேற்று 513 படைப் பிரிவின் படைத்தளபதி பிரிகேடியர் ராசிக் கட்டளைக்கு அமைவாக மதிய உணவு வழங்கி வைக்கப்பட்டது.

படை பிரிவினர் முதியோர்களை வரவேற்று அவர்களுக்கான உணவுகளைப் பரி மாறினர். (அ)

## க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறு செப்ரெம்பரில்

கொழும்பு, ஓக. 24

க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி வெளியிடப்படும் என இராஜாங்க கல்வி அமைச்சர் அரவிந்த் குமார் தெரிவித்தார்.

மேலும் இந்த வருடத்திற்கான உயர்தரப் பரீட்சையை டிசெம்பர் மாதத்திற்குள் நடத்துவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

தாமதமான அனைத்துப் பரீட்சைகளையும் 2024 ஆம் ஆண்டுக்குள் நடத்துவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறினார். (அ)

# சீனாவின் ஆய்வுக் கப்பல் கோரிக்கை இன்னமும் பரிசீலனை மட்டத்தில்தான்

## வெளிவிவகார அமைச்சு தகவல்

கொழும்பு, ஓக. 24

சீனாவின் கடல் ஆய்வு கப்பலுக்கான ஷி யான் 6 இலங்கைக்கு வருவதற்கு கோரிக்கை விடுத்துள்ள கோரிக்கை இன்னமும் பரிசீலனை மட்டத்திலேயே இருப்பதாக வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் பிரியங்கா விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களில் தரித்து நிறுத்த சீனாவின் கடல் ஆய்வுக் கப்பலான ஷி யான் 6 கோரிக்கை விடுத்துள்ளது.

ஒக்ரோபர் மாதம் இலங்கைவரும் ஷி யான் 6 கப்பல் நவம்பர் வரை இலங்கையில் தரித்து நிறுத்தப்படும் என சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

என்றாலும், இந்த கப்பலின் வருகைக்கு இன்னமும் இலங்கை அனுமதியளிக்கவில்லை.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் பிரியங்கா விக்கிரமசிங்க,

இலங்கையில் சீனாவின் ஆராய்ச்சிக் கப்பலை நிறுத்த சீனா அனுமதி கோரியுள்ளது.

ஷி யான் 6 கப்பலின் வருகைக்கே பீஜிங் அனுமதி கோரியதாகவும், ஆனால், இதற்கான திகதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. கோரிக்கை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது என்று கூறினார்.

ஷி யான் 6 கப்பலானது கடல்சார்வியல், கடல் புவியியல், கடல் சூழலியல் மற்றும் விண்வெளி சோதனைகளை மேற்கொள்கிறது.

கடந்த ஆண்டு, விண்வெளி கண்காணிப்பில் நிபுணத்துவமிக்கதாக கருதப்படும் யுவான் வாங் 5 என்ற சீன ஆராய்ச்சிக் கப்பலானது அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தந்தது. இந்தக் கப்பலின் வருகைக்கு இந்தியா தமது கவலையை இலங்கை அரசாங்கத்துக்கு வெளிப்படுத்தியிருந்தது.

இந்தியப் பெருங்கடலில் சீனாவின் அதிகரித்துவரும் பிரசன்னம் மற்றும் இலங்கையில் அதன் செல்வாக்கு ஆகியவற்றில் இந்தியா எப்போதும் கவனம் கொண்டுள்ளது.

இலங்கையானது மூலோபாய ரீதியாக முக்கிய அமைவிடத்தை கொண்டுள்ளதுடன், கிழக்கு-மேற்கு சர்வதேச கப்பல் போக்குவரத்து பாதையின் பிரதான அமைவிடமாகவும் உள்ளது.

கடந்த ஆண்டு, இலங்கை கடற்பரப்பில் குறித்த கப்பல் இருக்கும் சந்தர்ப்பங்களில் எந்தவொரு ஆய்வு நடவடிக்கைகளிலும் ஈடுபட அனுமதியளிக்கவேண்டாம் என சீனாவிடம் கொழும்பு கோரிக்கை விடுத்துடன், அதன் ஊடாக புதுடில்லியின் கவலைகளை நிவர்த்தி செய்ய முயற்சித்தது. (அ)

## துறை அமைச்சு அலுவலகத்துக்கு மின்சாரசபை சிவப்பு அறிவித்தல்!

கொழும்பு, ஓக. 24

கொழும்பு கோட்டை உலக வர்த்தக நிலையத்தின் இருபத்தைந்தாவது மாடியில் உள்ள துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை இராஜாங்க அமைச்சின் அலுவலகம் மின் கட்டணத்தைச் செலுத்தாத காரணத்தினால், சிவப்பு அறிவிப்புடன் 80 இலட்சம் ரூபாவுக்கான கட்டணப் பட்டியலை மின்சார சபை அனுப்பியுள்ளது.

தனது அலுவலக மின்சாரம் துண்டிக்கப்படும் என தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர உறுதிப்படுத்தினார்.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு இது தொடர்பில் அறிவித்தபோதும் இதுவரை கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் அவர் கூறினார். (அ)

## வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்தார் அமெ. தூதுவர்



யாழ்ப்பாணம், ஓக. 24

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்டார்.

பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக நேற்று யாழ்ப்பாணம் அமெரிக்கத் தூதர், பல்வேறு தரப்புக்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.

முன்னதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை சந்தித்த அமெரிக்கத் தூதுவர், வடக்கு மாகாணத்திற்கான சமூகப் பொருளாதார சவால்கள் மற்றும் வாய்ப்புகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

மேலும் வட மாகாண அபிவிருத்திக்கு எவ்வகையில் ஆதரவு வழங்கமுடியும் என்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

தொடர்ந்து, யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கும் விஜயம் செய்து நூலகத்தை பார்வையிட்டார்.

பின்னர் அமெரிக்க நிதி உதவியின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் காலநிலை மாற்ற தழுவல் திட்டமான கார்பன் புளூாபிரிண்ட் கடற்பாசி பயிரிச்செய்னை இடம்பெற்றுவரும் பிரதேசங்களுக்கு விஜயத்தை மேற்கொண்டார்.

இதன்போது "இலங்கை கடல்சார் பொருளாதாரத்தில் முன்னோடியாகவும், கடல்சார் பாதுகாப்பு மையமாகவும் இருக்க வேண்டும்" என அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# நான் இறக்கவில்லை பரவியது வதந்தியே

## சிம்பாப்வேயின் ஹீத் ஸ்ட்ரீக்




ஹராரே, ஒக. 24

சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் ஹீத் ஸ்ட்ரீக், புற்றுநோய் பாதிப்பால் உயிரிழந்து விட்டார் என்று செய்திகள் வெளியாகின. இதனையடுத்து பிரபலங்கள் பலர் இரங்கல் தெரிவித்த சூழலில் அது வதந்தி என்றும் தான் உயிருடன் இருக்கிறார் என்றும் அவரே விளக்கம் அளித்துள்ளார்.

49 வயதான அவர், சிம்பாப்வே அணிக்காக 1993 முதல் 2005 வரையில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடினார். அந்த அணியின் தலைவராகவும் பயிற்றுநராகவும் பணியாற்றி உள்ளார். சிம்பாப்வே அணிக்காக விளையாடிய வீரர்களில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்களை கைப்பற்றிய வீரராகவும் திகழ்கிறார்.

இந்நிலையில், அவர் உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது. அவரது மறைவுக்கு பிரபலங்கள் மற்றும் ரசிகர்கள் இரங்கல் தெரிவித்தனர். இந்நிலையில், அது குறித்த செய்தியை அவர் அறிந்ததும் அதிர்ச்சியில் உறைந்துள்ளார். அவர் சமூக வலைதளத்தில் இல்லாத காரணத்தால் உடனடியாக அது வதந்தி என உலகுக்குச் சொல்லவும் முடியாமல் தவித்துள்ளார்.

"இதுபோன்ற வதந்திகளை பரப்புவதற்கு முன்பு மக்கள் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். நான் இப்போது நலமுடன் இருக்கிறேன். புற்றுநோயில் இருந்து மீண்டு வருகிறேன். நான் இப்போது வீட்டில் உள்ளேன். சிகிச்சை முறை கொஞ்சம் வலி தருகிறது. நான் உயிரிழந்துவிட்டதாக யாரோ ஒருவர் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். அதையடுத்து மக்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். அது சரியான தகவல் அல்ல. நான் நோய் பாதிப்பில் இருந்து மீண்டு வருகிறேன்" - என்று கூறியுள்ளார். (ஐ)

# ஆப்கானிஸ்தானுக்கு எதிராக பாகிஸ்தான் இமாலய வெற்றி!

அம்பாந்தோட்டை, ஒக. 24

ஆப்கானிஸ்தான் அணியை 59 ஓட்டங்களுக்கு சுருட்டிய பாகிஸ்தான் 142 ஓட்டங்களால் பெரு வெற்றி பெற்றது.

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கு முன்பாக பாகிஸ்தான் அணி ஆப்கானிஸ்தானுக்கு எதிராக 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. இலங்கையில் நடக்கும் இந்தத் தொடரில் முதலாவது ஒருநாள் போட்டி அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 47.1 ஓவர்களில் 201 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

ஒரு நாள் கிரிக்கெட்டில் பாகிஸ்தானை, ஆப்கானிஸ்தான் சகல விக்கெட்களையும் இழக்கச் செய்தது இதுவே முதன் முறையாகும்.

இதில், இமாம் உல் ஹக் 61 ஓட்டங்கள், ஷதாப் கான் 39 ஓட்டங்கள் எடுத்தனர்.

இதையடுத்து, 202 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் களமிறங்கியது. தொடக்கம் முதல் பாகிஸ்தான் பந்துவீச்சு சிறப்பாக இருந்தது. இதனால் விக்கெட்கள் விரைவில் வீழ்ந்தன. ஆப்கானிஸ்தான் அணி 59 ஓட்டகளுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதன் மூலம் 142 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் பெரு வெற்றியை ருசித்தது.

பாகிஸ்தான் சார்பில் ஹரிஸ் ராப் 5 விக்கெட் வீழ்த்தி ஆட்ட நாயகன் விருது வென்றார். (ஐ)

## உலகக் கிண்ண சதுரங்கம்:

# கார்ல்சன் - பிரக்ஞானந்தா மோதிய முதல் ஆட்டம் சமநிலையில் நிறைவு




பாகு, ஒக. 24

உலகக் கிண்ண சதுரங்க தொடரின் இறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான நோர்வேயின் மேக்னஸ் கார்ல்சனுக்கு எதிரான முதல் போட்டியை சமன் செய்தார் இந்திய கிராண்ட்மாஸ்டரான பிரக்ஞானந்தா.

உலகக் கிண்ண சதுரங்க தொடர் அசர்பைஜானின் பாகு நகரில் நடக்கிறது. இதன் இறுதிப் போட்டி நேற்று முன்னதினம் ஆரம்பமானது.

முதல் நிலை வீரரான நோர்வேயின் மேக்னஸ் கார்ல்சன், 18 வயதான இந்திய கிராண்ட் மாஸ்டரும் தமிழருமான பிரக்ஞானந்தாவை எதிர்கொண்டார். கிளாசிக்கல் ஆட்டமான இதில் வெள்ளை நிற காய்களுடன் களமிறங்கினார். பிரக்ஞானந்தாவின் சில காய் நகர்த்தல்கள் கவனம் ஈர்த்தன.

கார்ல்சனுக்கு சமதையா போட்டியை அளித்தார் பிரக்ஞானந்தா. இருவருமே ஒரு சேர ஆதிக்கம் செலுத்திய நிலையில் 35ஆவது காய் நகர்த்தலின்போது ஆட்டம் சமநிலையில் முடித்துக்கொள்ளப்பட்டது.

பிராக்ஞானந்தா கூறும்போது, "இறுதிப் போட்டியின் முதல் ஆட்டத்தில் காய் நகர்த்தலில் நான் எந்த பிரச்னையிலும் இருந்ததாக நினைக்கவில்லை" என்றார்.

கார்ல்சன் கூறும்போது, "இறுதிப் போட்டியின் 2ஆவது ஆட்டம் போரட்டமாக இருக்கும். பிரக்ஞானந்தா கண்டிப்பாக சவால் அளிப்பார்" என்றார். (ஐ)




# உலக சம்பியன்ஷிப் தடகளம்; ஷாகாரி சாதனை படைத்தார்

புடாபெஸ்ட், ஒக. 24

10.65 செக்கன்களில் 100 மீற்றர் பந்தய தூரத்தை ஓடிக் கடந்து அமெரிக்காவின் ஷாகாரி ரிச்சர்ட்சன் சாதனை படைத்துள்ளார்.

19ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி ஹங்கேரியின் தலைநகர் புடாபெஸ்டில் நடந்து வருகிறது. இதில் உலகின் அதிவேக பெண்மணி யார் என்பதை தீர்மானிக்கும் 100 மீற்றர் ஓட்டப்பந்தயம் 3ஆவது நாளான திங்கட்கிழமை இரவு நடந்தது.

இறுதிப்போட்டியில் 9 வீராங்கனைகள் பங்கேற்றனர். இதில் கடைசி ஓடுபாதையில் இருந்து ஓடத் தொடங்கிய அமெரிக்க வீராங்கனை ஷாகாரி ரிச்சர்ட்சன் முதலில் சற்று பின்தங்கி இருந்தாலும் கடைசி கட்டத்தில் அபாரமாக செயல்பட்டு அனைவரையும் பின்னுக்கு தள்ளி 10.65 செக்கன்களில் பந்தய தூரத்தை கடந்து புதிய சாதனையுடன் தங்கப்பதக்கத்தை சொந்தமாக்கினார்.

கடந்த ஆண்டு நடந்த உலக போட்டியில் 2ஆவது இடம் பிடித்த ஜமைக்கா வீராங்கனை ஷெரிகா ஜாக்சன் (10.72 வினாடி) மீண்டும் வெள்ளிப் பதக்கம் பெற்றார். நடப்பு சம்பியனும், 5 முறை தங்கப் பதக்கம் வென்று ஆதிக்கம் செலுத்தியவருமான மற்றொரு ஜமைக்கா வீராங்கனை 36 வயது ஷெல்லி ஆன் பிரேசர் பிரைஸ் 10.77 வினாடியில் இலக்கை எட்டி வெண்கலப் பதக்கத்தை தனதாக்கினார்.

23 வயதான ஷாகாரி ரிச்சர்ட்சன் தனது முதல் உலக சம்பியன்ஷிப் போட்டியிலேயே தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார். 2021ஆம் ஆண்டு ரோக்கியோவில் நடந்த ஒலிம்பிக் போட்டிக்கான அமெரிக்க தகுதி சுற்றில் வெற்றி கண்ட ஷாகாரி ரிச்சர்ட்சன் போதைப்பொருள் பயன்படுத்தியது கண்டறியப்பட்டதால் ஒரு மாத தடை அந்த ஒலிம்பிக்கையும் தவறவிட வேண்டியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐ. பி. எல். தொடர் இலங்கையில் நடக்க வாய்ப்பு!

புதுடில்லி, ஒக. 24

ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் தொடர் அடுத்த ஆண்டு இலங்கை அல்லது ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடத்துவது குறித்து ஆராயப்படுகின்றது.

ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் தொடர் உலகப் பிரபலம் பெற்றது. இந்தியாவில் மார்ச், ஏப்ரல் மாதங்களில் வழக்கமாக நடத்தப்படுகிறது. இந்தத் தொடரில் தற்போது 10 அணிகள் பங்கேற்று வருகின்றன.




இதேகால பகுதியில் இந்தியாவில் அடுத்த ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதனால் இந்தத் தொடரை இலங்கை அல்லது ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடத்த பரிசீலிக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும், இது குறித்து உத்தியோக பூர்வமாக தகவல்கள் அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை, கடந்த 2009ஆம் ஆண்டு தேர்தலின்போது தென்னாபிரிக்காவிலும், 2020, 2021 கொரோனா பரவலால் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலும் ஐ. பி. எல். தொடர் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முல்லைத்தீவில் இந்துக்கள் - பௌத்தர்கள் இடையே அமைதியின்மை தொடர்வது ஏன்?

ரஞ்ஜன் அருண் பிரசாத்

முல்லைத்தீவு - குருந்தூர்மலை பகுதியில் இந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும் இடையே அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. இதற்கு காரணம் என்ன?

குருந்தூர்மலையில் பௌத்த விகாரை மற்றும் இந்து ஆலயம் ஆகியன ஒரே இடத்தில் காணப்படுகின்றன. இந்த பகுதி, பௌத்தர்களுக்கு சொந்தமானது என பௌத்தர்கள் கூறுகின்ற நிலையில், அதே பகுதி தமிழர்களுக்குச் சொந்தமானது எனக் கோரி பல ஆண்டு காலமாக பிரச்னை தொடர்ந்த வண்ணம் காணப்பட்டது.

இந்த நிலையில், குறித்த பகுதி தொடர்பில் நீதிமன்ற விசாரணைகள் இடம்பெற்று வந்த பின்னணியில், வழிபாடுகளில் ஈடுபட இரண்டு தரப்பிற்கும் முல்லைத்தீவு நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

இதன்படி, குருந்தூர்மலையில் உள்ள ஆதிசிவன் ஐய்யனார் ஆலயத்தில் கடந்த மாதம் 14ஆம் தேதி பொங்கல் பொங்கி, வழிபாடுகளில் ஈடுபட இந்துக்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது, அங்கு வருகை தந்த பௌத்த தேரர்கள் தலைமையிலான குழு, பொங்கல் நிகழ்வை நடத்துவதற்கு இடையூறு விளைவித்திருந்தது.

அதையடுத்து, அந்தப் பகுதியில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக அன்றைய தினம் பொங்கல் பொங்குவதற்கு முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

**முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நடந்த விசாரணை**

தொல்பொருள் பெறுமதிமிக்க பகுதி மற்றும் பௌத்த மக்களுக்கு சொந்தமான பகுதி என்பதால், அங்கு தீ மூட்டி பொங்கல் பொங்குவதற்கு அனுமதிக்க முடியாது என பௌத்தர்கள் கூறியிருந்தனர்.

எனினும், தாம் திட்டமிட்டதன் பிரகாரம் பொங்கலை பொங்கி வழிபாடுகளை நடத்த போவதாக தமிழர்கள் கூறிய போதிலும், பாதுகாப்பு பிரிவு அதற்கு அனுமதி வழங்கவில்லை.

இரண்டு பிரிவுகளுக்கு இடையில் அமைதியின்மை ஏற்படும் என்பதைக் காரணம் காட்டி, அன்றைய தினம் பொங்கல் பொங்கி வழிபாடுகளை நடத்த பாதுகாப்பு பிரிவு அனுமதி வழங்கவில்லை.

எனினும், சிவன் ஆலயத்தில் வழிபாடுகளை நடத்துவதற்கு மாத்திரம் தமிழர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அதற்கும் பௌத்த மக்கள் எதிர்ப்பு தெரிவித்த போதிலும், அன்றைய தினம் வழிபாடுகளை மாத்திரம் நடத்த அனுமதி வழங்கப்பட்டது.

இதையடுத்து, குருந்தூர்மலை பகுதியில் வழிபாடு



களை நடத்துவது தொடர்பாக மீண்டும் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம் பெற்றதுடன், வழிபாடுகளை நடத்த இரண்டு தரப்பிற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

**இந்து மக்களுக்கும் பௌத்த மக்களுக்கும் இடையே நடந்த 'வழிபாடு மோதல்"**

இந்த நிலையில், கடந்த ஆகஸ்ட் 18ஆம் தேதி மீண்டும் பொங்கல் பொங்கி வழிபாடுகளை நடத்த இந்து மக்களுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், குருந்தூர்மலையை பாதுகாக்க அனைத்து பௌத்த மக்களையும் ஒன்றிணையுமாறு கோரி பௌத்தர்கள் பகிரங்க அழைப்பு விடுத்திருந்தனர்.

இதன்படி, குருந்தூர்மலைக்கு பல பேருந்துகளில் பெருமளவான பௌத்த மக்கள் அன்று அதிகாலை முதல் வருகை தர ஆரம்பித்திருந்தனர்.

குருந்தூர்மலையிலுள்ள பௌத்த விகாரைக்கு வருகைத் தந்த பௌத்த மக்கள், அங்கு பௌத்த முறைப்படி வழிபாடுகளை நடத்தியிருந்தனர்.

போலிசார், விசேஷ அதிரடிபடை, கலகத்தடுப்பு பிரிவு உள்ளிட்ட பாதுகாப்பு அதிகாரிகள், குறித்த பகுதிக்கு வரவழைக்கப்பட்டு, பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.


பௌத்த வழிபாடுகள் நடந்துகொண்டிருந்த தருணத்தில், இந்து மக்கள் பொங்கல் பொங்கி வழிபாடுகளை நடத்துவதற்கான பொருட்களுடன் அங்கு வருகை தந்தனர்.

இவ்வாறு வருகை தந்த இந்து மக்கள், இந்து ஆலயம் அமைந்துள்ள பகுதிக்குச் சென்று பொங்கல் பொங்கி வழிபாடுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் பிரகாரம், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளின் வழிகாட்டலுக்கு அமைய, குறித்த பகுதியில் பொங்கல் பொங்கி வழிபாடுகளை நடத்த ஆரம்பித்த நிலையில், மற்றுமொரு தரப்பு இரண்டு இடங்களில் பொங்கல் பொங்க அனுமதி வழங்குமாறு கோரியிருந்தனர்.

எனினும், தொல்பொருள் பெறுமதிமிக்க பகுதி என்ப





தால், அங்கு தீ மூட்ட அனுமதி வழங்க முடியாது என தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் கூறியிருந்தனர்.

எனினும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பிரதிநிதிகள் மற்றும் மேலும் பலர் தமக்கும் பொங்கல் பொங்கி வழிபாடுகளை நடத்த அனுமதிக்குமாறு கோரியிருந்தனர்.

இறுதி வரை இரண்டு இடங்களில் பொங்கல் பொங்கி வழிபாடுகளை நடத்த அனுமதிக்க முடியாது என தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் கூறியிருந்தனர்.

இதையடுத்து, தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் இந்து மக்களுக்கு இடையில் வாக்குவாதம் ஏற்பட்ட போதிலும், இரண்டு இடங்களில் பொங்கல் பொங்குவதற்கு அதிகாரிகள் அனுமதி வழங்கவில்லை.

இந்த நிலையில், ஒரே இடத்தில் இரண்டு தடவை பொங்கல் பொங்கி இந்துக்கள் வழிபாடுகளை நடத்தியிருந்தனர்.

**இந்துக்கள் கூடிய இடத்திற்கு வர முயன்ற பௌத்த பிரிவினர்**

இவ்வாறு பொங்கல் பொங்கி வழிபாடுகளை நடத்தும் தருணத்தில், அங்கு பௌத்த பிக்கு ஒருவர் வருகைத் தந்து, தமது எதிர்ப்பை வெளியிட்டார்.

தொல்பொருள் பெறுமதிமிக்க இடத்தில், தொல்பொருள் விதிமுறைகளை மீறி இந்துக்கள் வழிபாடுகளை நடத்துவதாக, குறித்த பௌத்த பிக்கு எதிர்ப்பை வெளியிட்டார்.

இதன்போது, அந்த இடத்தில் கூடியிருந்த இந்துக்கள், பௌத்த பிக்குவிற்கு தமது எதிர்ப்பை வெளியிட்ட நிலையில், பௌத்த பிக்குவை அந்த இடத்திலிருந்து வெளியேற்ற பாதுகாப்பு பிரிவினர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

அதையடுத்து, இந்துக்கள் பொங்கல் பொங்கி, ஆலயத்திற்கு முன்பாக கடவுளுக்கு படைத்து தமது வழிபாடுகளை நடத்தியிருந்தனர்.

இந்துக்கள் கூடியிருந்த இடத்திற்கு பௌத்த மக்கள் வருகை தர பல தடவைகள் முயன்ற போதிலும், அதற்கு பாதுகாப்பு பிரிவினர் அனுமதி வழங்கவில்லை.

வழிபாடுகளை நிறைவு செய்துகொண்ட இந்துமக்





கள் அங்கிருந்து வெளியேறியிருந்தனர். இதன்போது யாழ்ப்பாணம் சிவகுரு ஆதினத்தின் ஸ்தாபகர் தவத்திரு வேலன் சுவாமி மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் அங்கு பிரசன்னமாகி வழிபாடுகளை நடத்தினர்.

பௌத்த மக்கள் இந்து ஆலயம் அமைந்துள்ள இடத்திற்கு வருகை தந்து, வழிபாடுகளை நடத்த வேண்டும் என பாதுகாப்பு பிரிவிடம் கோரிய நிலையில், அனைத்து இந்து மக்களும் அங்கிருந்து வெளியேறியதை அடுத்தே அனுமதி வழங்க முடியும் எனக் கூறியிருந்தனர்.

எனினும், பௌத்த மக்கள் வழிபாடுகளை நிறுத்த வேண்டும் எனவும், பௌத்த விகாரையை பார்வையிட தமக்கும் அனுமதி வழங்க வேண்டும் எனவும் வேலன் சுவாமி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் கோரியிருந்தனர்.

இதன்போது, பாதுகாப்பு பிரிவிற்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையில் அமைதியின்மை ஏற்பட்டு, பின்னர் பல்கலைக்கழக மாணவர்கள் அங்கு அமர்ந்தவாறு



வழிபாடுகளை நடத்த ஆரம்பித்தனர்.

இதையடுத்து, பௌத்த மக்களை குறித்த பகுதிக்குள் பாதுகாப்பு பிரிவினர் அனுமதித்து, வழிபாடுகளை நடத்த அனுமதி வழங்கியிருந்தனர்.

பௌத்த மக்கள் இந்து ஆலயம் அமைந்துள்ள பகுதிக்கு வருகைத் தந்து வழிபாடுகளில் ஈடுபட்டு அங்கிருந்து வெளியேறிய பின்னர், வேலன் சுவாமி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் பௌத்த விகாரை அமைந்துள்ள பகுதிக்குள் சென்று பௌத்த விகாரையை பார்வையிட்ட நிலையில், அங்கும் அமைதியின்மை ஏற்பட்டது.

**தொடரும் அமைதியின்மை**

இந்துக்களை அங்கிருந்து வெளியேற்றுமாறு பௌத்த மக்கள் கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

இதன்போது, தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுக்கும், பௌத்த மக்களுக்கும் இடையில் அமைதியின்மை ஏற்பட்டு, பின்னர் நிலைமை வழமைக்கு கொண்டு வரப்பட்டது.

இந்துக்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறிய போதிலும், பௌத்த மக்கள் குருந்தூர்மலை பகுதிக்கு பிற்பகல் வரை பஸ்களில் வருகைத் தந்ததை காணக்கூடியதாக இருந்தது.

யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் குருந்தூர்மலையில் தொடர்ச்சியாக பொங்கல்பொங்கி வழிபாடுகளை நடத்திய போதிலும், யுத்தம் நிறைவடைந்த 2009 ஆம் ஆண்டுக்கு பின்னரான காலத்தில் தமக்கு அந்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என தமிழர்கள் கூறுகின்றனர்.

எனினும், 14 வருடங்களில் பின்னர் இவ்வாறான சந்தர்ப்பம் கிடைத்தமை தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும், ஆலயத்தை சூழ பல இடங்களில் பொங்கல் பொங்கி வழிபாடுகளை நடத்த அனுமதி வழங்கினால் சிறந்தது எனவும் இந்துக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (பிபிசி)

# அமித்ஷாவின் கூற்று: புரிந்துகொள்ளப்பட்டதும், புரிந்துகொள்ளப்படாததும்.



யதீந்திரா

பாரதிய ஜனதா கட்சியின் இரண்டாம் நிலை தலைவரும், உள்துறை அமைச்சருமான, அமித்ஷா, தெரிவித்திருந்த கருத்துக்கள் பலரது கவனத்தை பெற்றிருந்தது. கடந்த மாதம் 27ம் திகதி, இராமேஸ்வரத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில், ஈழத் தமிழ் மக்கள் பெருந்தொகையில் கொல்லப்பட்டதாக, அமித்ஷா கூறியிருந்தார். பாரதிய ஜனதா கட்சி, ஈழத் தமிழ் மக்கள் மீது இனப்படுகொலை இடம்பெற்றதை ஏற்றுக்கொண்டிருப்பதாக, சிலர் இதற்கு விளக்கமளிக்க முற்பட்டனர். சிலரோ, இந்தியாவின் அணுகுமுறையில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாக கூறமுற்பட்டனர்.

இந்தக் கருத்து எவ்வாறானதொரு சூழலில் முன்வைக்கப்பட்டது என்பதை உற்றுநோக்க வேண்டும். தேர்தல் நெருங்கிவரும் நிலையில், தமிழ் நாட்டில் பாரதிய ஜனதா கட்சியின் செல்வாக்கை அதிகரித்துக் கொள்வதற்கான உக்திகள் திட்டமிடப்படும் சூழலில்தான், அமித்ஷா இவ்வாறானதொரு கருத்தை தெரிவித்திருக்கின்றார். அமித்ஷாவின் கருத்தை இன்னும் சற்று ஆழமாக நோக்கினால், தமிழ் நாட்டில், பாரதிய ஜனதா கட்சியின் செல்வாக்கை அதிகரித்துக் கொள்வதற்காக பாடுபட்டுவரும், பாரதிய ஜனதாவின் தமிழ் நாட்டு தலைவர் அண்ணாமலைக்கு ஆதரவாகவே அவ்வாறானதொரு கருத்தை முன்வைத்திருக்கின்றார். அண்ணாமலை சில தடவைகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருக்கின்றார். அண்மையில் இங்கிலாந்தில் புலம்பெயர் தமிழர்களோடு உரையாடியிருந்தார். பிரித்தானியாவை தளமாகக் கொண்டிருக்கும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள், அவருக்கு பெரிய வரவேற்றை வழங்கியிருந்தன. அதிகாரத்திலிருக்கும் பாரதிய ஜனதா கட்சியுடன் நெருங்கினால், இந்தியாவின் ஆசிர்வாதத்தை பெறலாமென்னும் புரிதலொன்று தமிழ்ச் சூழலில் ஒரு பார்வையாக இருக்கின்றது. அதற்காக சிலர், தங்களது புரிதலுக்குட்பட்ட முயற்சிகளையும் மேற்கொண்டுவருகின்றனர். அண்ணாமலைக்கான வரவேற்பின் பின்னணியும் இதுதான்.

பாரதிய ஜனதா கட்சியை பொறுத்தவரையில், ஈழத் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கு, அப்போது ஆட்சியிலிருந்த, காங்கிரஸ் கட்சியும், அதனுடன் கூட்டுவைத்திருந்த திராவிட முன்னேற்றக் கழகமும்தான் காரணம். இந்தக் கருத்தைத்தான் அமித்ஷா, இராமேஸ்வரத்தில் சுட்டிக்காட்டியிருந்தார். இந்த இடத்தில் அமித்ஷாவின் கருத்தை முன்னிறுத்தி சிந்திக்க முற்படுவோர், திராவிட முன்னேற்றக் கழக்கத்தின் மீதான குற்றச்சாட்டை எவ்வாறு நோக்கப் போகின்றனர்? அதனை ஏற்றுக்கொள்கின்றனரா - அல்லது நிராகரிக்கின்றனரா? ஏற்றுக்கொண்டால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிர்நிலையிலேயே நிற்க வேண்டிவரும். ஏனெனில், பாரதிய ஜனதா கட்சியின் ஈழத் தமிழர் ஆதரவு நிலையென்பது, மிகவும் தெளிவாக, காங்கிரஸ் மற்றும் திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு எதிரானது.

இந்தியாவை பொறுத்தவரையில் பாரதிய ஜனதா கட்சி மிகவும் செல்வாக்குமிக்க கட்சி. பாரதிய ஜனதா கட்சியை சவாலுக்குள்ளாக்கக் கூடிய வகையில் பிறிதொரு தனிக்கட்சி இல்லை. காங்கிரஸ் பிராதான கட்சியாக இருந்தாலும் கூட, ஒப்பீட்டடிப்படையில் பலவீனமாகவே இருக்கின்றது. இந்த நிலையில்தான், நடைபெறவுள்ள தேர்தலில் பாரதிய ஜனதா கட்சிக்கு எதிரான கட்சிகள் அனைவரும் ஒன்றிணைந்து, இந்தியா என்னும் ஒரு கூட்டை உருவாக்கியிருக்கின்றனர். இந்தப் பின்புலத்தில், ஒப்பீட்டு அடிப்படையில், பாரதிய ஜனதா கட்சி நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கின்றது. கடந்த தேர்தலில் வெற்றிபெற்றது போன்று, இம்முறை, பாரிய வெற்றியை பெற முடியாதென்னும் கணிப்புக்கள் முன்வைக்கப்படுகின்றன. தமிழ் நாட்டை ஆளும் திராவிட முன்னேற்றக்கழகம், இந்தியா கூட்டில் முக்கிய பங்காளியாகும். இந்த பின்புலத்தில்தான், ஈழத் தமிழரின் கண்ணீருக்கு இவர்கள் பதில் கூறவேண்டுமென்னும் பிரச்சாரத்தை பாரதிய ஜனதாவின் தமிழ் நாட்டு தலைமை கையிலெடுத்திருக்கின்றது.

இது ஈழத் தமிழ் மக்களுக்கு சாதகமானதா? சாதகம்தான். இந்தியாவின் செல்வாக்குமிக்க கட்சி. அதே வேளை, பெரும்பான்மையான இந்து மக்களின் ஆதரவை பெற்றிருக்கும் கட்சியொன்றின் இரண்டாம் நிலைத் தலைவர், இவ்வாறானதொரு கருத்தை கூறுகின்றார் என்றால், அது சாதகமான விடயம்தான். ஆனால் பெருந்தொகையில் கொலையை எதிர்கொண்ட மக்கள் கூட்டமொன்றிக்கான நீதியென்ன என்பதுதான் இந்த இடத்தில் எழும் கேள்வி? அந்த நீதி தொடர்பில் பாரதிய ஜனதா கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்ன என்பதுதான் கேள்வி?



ஈழத் தமிழருக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன, என்பது இரகசியமான ஒன்றல்ல. அதே வேளை, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் போது, இந்தியா எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கின்றது என்பதும் இரகசியமானதல்ல. இது தொடர்பான கேள்விக்கு, இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெயசங்கள் பதிலளித்திருக்கின்றார். அதாவது, இலங்கையை நாங்கள், இன அடிப்படையில் நோக்குவதில்லை. இலங்கை என்னுமடிப்படையிலேயே விடங்களை அணுகுகின்றோம். இது எமது நிலைப்பாடு மட்டுமல்ல - மாறாக, முன்னைய அரசாங்கங்கள், இலங்கை தொடர்பில் எவ்வாறான கொள்கை நிலைப்பாட்டை கொண்டிருந்தனவோ, அதனையே, பாரதிய ஜனதா கட்சியும் தொடர்கின்றது. இந்தக் கூற்றோடு, அமித்ஷாவின் கருத்தை தொடர்புபடுத்தினால், ஷாவின் கருத்துக்கள் முற்றிலும் உள்நாட்டு அரசியலை எதிர்கொள்ளும் உபாயத்துடன் தொடர்புபடுவதை நாம் காணலாம்.

> **இதுவரையில் திராவிட கட்சிகள் வசமிருந்த, ஈழ ஆதரவுக் கரிசனையை, தமிழ் நாட்டு பாரதிய ஜனதா கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான முயற்சியில் அண்ணாமலை கடுமையாக உழைக்கின்றார். இதன் காரணமாகவே, தங்களின் தமிழ் நாட்டுக்கான தேர்தல் பிரசார திட்டத்தில், ஈழத் தமிழ் அவலத்தை பிரதான பேசு பொருளாக்கியிருக்கின்றனர்.**

ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் கொள்கை நிலைப்பாடு இதுவரையில் 13வது திருத்தச்சட்டத்தை தாண்டிச் செல்லவில்லை. பிரதமர் மோடி, கூட்டுறவு சமஸ்டியின் மீதான ஈடுபாட்டை வெளிப்படுத்தியிருந்தாலும் கூட, அவர் தனது பார்வையின் அடிப்படையாக, இந்தியாவில் தற்போது நடைமுறையிலிருக்கும் மானில ஆட்சி முறைமையே சுட்டிக்காட்டுகின்றார். ஆனால் இலங்கை விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டது. அதன் விளைவான 13வது திருத்தச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. இதனை புரிந்துகொண்டுதான், அமித்ஷாவின் கூற்றை உற்றுநோக்க வேண்டும். இந்தியா 13வது திருத்தச்சட்டத்தை வலியுறுத்தினால், ஈழத் தமிழ் மக்கள் இந்தியாவிலிருந்து விலகிச் செல்வார்கள், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஈழத் தமிழரில்தான் தங்கியிருக்கின்றது - இப்படியெல்லாம் கூறி, நம்மவர்கள் சிலர், சுயதிருப்தி கொண்டாலும் கூட, இந்தியாவின் அடிப்படையான நிலைப்பாட்டில் மாற்றங்கள் இல்லை. வல்லரசுகளின் அயலுறவுக் கொள்கை பிராந்தியரீதியில் மற்றும் உலகளவில் ஏற்படும் அரசியல் மாறங்களினால் மட்டுமே நிகழ முடியும். அவ்வாறான சூழலில், இந்தியாவே, அதன் நிலைப்பாட்டை மாற்றியமைக்கும். இந்திராகாந்தி காலத்து இந்தியாவின் அணுகுமுறை அவ்வாறான ஒன்றுதான்.

அதே வேளை, நாடுகளின் அணுகுமுறையை நோக்குகின்ற போது, அரசுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை உற்றுநோக்க வேண்டும். தமிழ்ச் சூழலில் இந்த விடயத்தை புரிந்துகொள்வதிலும் தெளிவின்மை காணப்படுகின்றது. அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துவர்கள், தேர்தல்களின் போது, தங்களின் ஆட்சியை தக்கவைப்பதற்காக பல்வேறு வாக்குறுதிகளை வழங்குவார்கள், பல கருத்துக்களை முன்வைப்பார்கள். ஆனால் அரசுக்கான அணுகுமுறை ஒன்றுண்டு. கொள்கை நிலைப்பாட்டை முன்னெடுப்பதில் அரசே முதன்மையானது. சிறிய நாடுகளில் வேண்டுமானால், அரசாங்கங்கள் தங்களின் விருப்பங்களுக்கு ஏற்ப, சில தீர்மானங்களை நிறைவேற்ற முடியும். ஆனால், பெரிய நாடுகளின் கொள்கை நிலைப்பாட்டில் சாதாரணமாக ஒரு போதும் மாற்றங்கள் ஏற்படுவதில்லை. இதனால்தான், வெளிவிவகாரக் கொள்கையை ஒரு தொடர் நிகழ்வென்பார்கள். இந்த தொடர் நிகழ்வில் பிரதமர்கள் எவராகவும் இருக்கலாம் ஆனால் அவர்கள் நினைத்தவுடன் கொள்கை நிலைப்பாடு மாறிவிடாது.



இலங்கையின் உள்விவகாரங்களில் தலையீடு செய்யும் பலம்பொருந்திய நாடுகள் அனைத்தும், இலங்கையின் ஆட்சியதிகாரத்தை தீர்மானிக்கும் பெரும்பான்மை மக்களை அடிப்படையாகக் கொண்டே, தங்களின் கொள்கை முடிவுகளை மேற்கொள்கின்றனர். இதற்கு இந்தியாவும் விதிவிலக்கல்ல. அமெரிக்காவும் விதிவிலக்கல்ல. இந்திராகாந்தி காலத்தில் மட்டும்தான், இந்தியா தமிழ் மக்களுக்கு பிரத்தியேக முக்கியத்துவத்தை வழங்கியிருந்தது. அன்றிருந்த அரசியல் சூழலே அதற்கு காரணம். குறிப்பாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்தியாவிற்கு எதிர்நிலையில் பயணிக்க முற்பட்டதன் காரணமாகவே அவ்வாறானதொரு சூழல் உருவாகியது.

அவ்வாறானதொரு சூழல் ஏற்பட்டால் இந்தியா மீளவும் கடுமையான தீர்மானங்களை நிச்சயம் எடுக்கும். 1987இன் அனுபவங்களுக்கு பின்னர், தென்னிலங்கையின் ஆட்சியாளர்கள் இந்த விடயத்தில் கவனமாகவே செயற்பட்டுவருகின்றனர். மகிந்த ராஜபக்சவின் சீன சார்பு நிலைப்பாட்டால் இந்தியா அதிருப்தியுற்றாலும் கூட, நிலைமைகள் இந்தியாவின் கட்டுப்பாட்டை மீறி, அதிகம் சென்றுவிட்டதாக கூறிவிட முடியாது. பாதுகாப்பு விடயங்களில் சிக்கலான நிலைமை உருவானால் மட்டுமே இந்தியா கடுமையான தீர்மானங்களுக்கு செல்ல நேரிடும்.

அமித்ஷாவின் கருத்துக்களில் புளகாங்கிதம் அடைய ஒன்றுமில்லை. அதே வேளை, இந்தியாவின் ஆளும் தரப்போடு தொடர்புகளை பேணிக் கொள்வதற்கான வாய்ப்புக்களை பயன்படுத்திக்கொள்வதிலும் தவறில்லை. ஆனால் வெறுமனே, அவர்களது தேர்தல் தந்திரோபாயங்களுக்கான துருப்புச் சிட்டாக மட்டும் சுருங்கிப் போகாத வகையிலும் எமது நகர்வுகள் அமைய வேண்டும். தமிழ் நாட்டில் பாரதிய ஜனதா கட்சியின் செல்வாக்கை நிலைநிறுத்தும் முயற்சியில்தான், பாரதிய ஜனதா கட்சி தற்போது, ஈழத் தமிழர் பக்கம் திரும்பியிருக்கின்றது. பாரம்பரியமாக தமிழ் நாட்டின் ஈழ ஆதரவு கட்சிகளாக திராவிட கட்சிகள் மட்டுமே இருந்திருக்கின்றன. பாரதிய ஜனதா கட்சி, இதில் ஒரு உடைவை ஏற்படுத்த முயற்சிக்கின்றது. திராவிட கட்சிகள், தற்போதைய சூழலில் மத்தியில் செல்வாக்குச் செலுத்த முடியாத நிலையிலிருக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதன் மூலம், இதுவரையில் திராவிட கட்சிகள் வசமிருந்த, ஈழ ஆதரவுக் கரிசனையை, தமிழ் நாட்டு பாரதிய ஜனதா கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான முயற்சியில் அண்ணாமலை கடுமையாக உழைக்கின்றார். இதன் காரணமாகவே, தங்களின் தமிழ் நாட்டுக்கான தேர்தல் பிரச்சார திட்டத்தில், ஈழத் தமிழ் அவலத்தை பிரதான பேசு பொருளாக்கியிருக்கின்றனர். ஈழத் தமிழ் செயற்பாட்டாளர்கள் நிலைமையை நிதானமாக கையாள வேண்டும். அனைவரும் நமக்குத் தேவையென்று சிந்திக்க வேண்டும். ஏனெனில் எமது உறவு இந்தியாவுடனானது.

# குடிதண்ணீரைத் தேடி அலைந்து விபத்தில் சிக்கும் உயிரினங்கள்



மட்டக்களப்பு, ஓக. 23

தற்போது நிலவும் கடும் வறட்சி நிலமை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் குடிதண்ணீரைத் தேடிச் செல்லும் விலங்கினங்களும், விபத்தில் சிக்குண்டு உயிரிழப்பதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு அரிய வகை உயிரினங்களும் குடிதண்ணீரைத் தேடிச் செல்லும்போது உயிர்களைத் துறக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டம் மண்மனை மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தற்போதைய கடும் வறட்சியினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதியில் உள்ள கால்நடைகள் உன்னிச்சை - மட்டக்களப்பு பிரதான வீதி ஊடாக தினசரி குடிதண்ணீருக்காகவும் உணவுக்காகவும், அலைந்து திரிவதனால் வீதி விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றன.

அப்பகுதியில் இந்நிலைமை இவ்வாறு காணப்படுகின்றபோதிலும், மேய்ச்சலுக்குச் செல்லும் கால்நடைகளை திருடர்களும் மிகவும் சூட்சுமமான முறையில் களவாடிச் செல்வதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதே வேளை மட்டக்களப்பு நகரில் இருந்து மிக உயரமான இடத்திலுள்ள உன்னிச்சை கிராமத்தில் தினசரி காட்டு விலங்குகளும் தற்போது குடிதண்ணீருக்காக கிராமத்திற்குள் வரும்போது அவை வீதியில் செல்லும் கனரக வாகனங்களில் சிக்குண்டு விபத்துக்குள்ளாகி உயிரிழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நேற்று முன் தினம் செவ்வாய்கிழமை உன்னிச்சை பிரதான வீதியில் அரிய வகை மர அணில் ஒன்று இவ்வாறு விபத்தில் சிக்கி உயிரிழந்ததையும் அவதானிக்க முடிந்தது.

அப்பகுதி மக்களின் வாழ்வாதாரமாக காணப்படும் இந்த கால் நடைகளுக்கு வேண்டிய குடிதண்ணீரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வழங்க வேண்டும் உடன் முன்வர என்பதே என அங்குள்ள மக்களின் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ரூ.5,000 இலஞ்சம் வாங்கிய இரு பொலிஸ்காரர் கைது!

கொழும்பு, ஓக. 24

சட்டவிரோத மதுபான வியாபாரி ஒருவரிடம் இருந்து 5000 ரூபா இலஞ்சம் பெறும் போது பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் கான்ஸ்டபிள் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தெல்தெனிய பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் இதற்கு உதவிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முறைப்பாட்டாளர் ஓட்டிச் சென்ற முச்சக்கரவண்டியில் சட்டவிரோத மதுபானம் கடத்திய குற்றத்திலிருந்து தப்பிக்க சந்தேகநபர்கள் இருவரும் முதலில் 5000 ரூபாவை கோரியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# சிறுவர்களுக்கு அதிகளவான உடல் வறட்சி இருப்பின் வைத்தியசாலையை அணுகவும்!

கொழும்பு, ஓக. 24

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக சிறுவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் அவர்கள் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறுவர்கள் வெளி செயற்பாடுகளில் ஈடுபடும் போது அதிகளவில் வியர்வை வெளியேறுவதால் நீர்ச்சத்து குறைவடையும் வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மற்றும் மைதானங்களில் நேரங்களில் செலவிடும் போதும் அதிகமாக உடல் வறட்சி ஏற்படும் வாய்ப்பு அதிகமாக காணப்படுகின்றது என பொரளை லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய்கள் தொடர்பான விசேட வைத்தியர் தீபால் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

சிறுவர்கள் இவ்வாறு அதிகமான வறட்சி நழலையில் பாதிக்கப்படுவதை கட்டுப்படுத்த அதிகமாக தண்ணீர் பருகுவதற்கு கொடுக்க வேண்டும்.

மேலும், இளநீர், தேசிக்காய் சாறு, தோடம்பழம், மாதுளம் பழம், ஜீவனி போன்ற நீராகாரங்களை சிறுவர்களுக்கு அதிகமாக வழங்கவேண்டும்.

இதற்கும் அப்பால் அதிகமாக உடல் வறட்சி காணப்படுமாயின் உடனடியாக வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்-என்றார்.

(அ)

# ரூ. 1 1/2 இலட்சம் பெறுமதியான மாடு திருடிய பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தம்!

திருமலை, ஓக. 23

சுமார் ஒன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதியான மாடு ஒன்றை திருடிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட, கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணியில் இருந்து நேற்று முன் தினம் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள், மாடு ஒன்றை திருடிய குற்றச்சாட்டில் கடந்த 20 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அதனையடுத்து கைது செய்யப்பட்டவர் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில், அவர் பிணையில் வெளிவந்துள்ளார்.

இந்நிலையில், அவரை திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உடனடியாக பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

(அ)

